


786/92

# தர்கா
சாஹெப்

کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں

**ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.**

ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.

படிக்க...! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம் பாதுகாக்க...!!

**உருஸ் 19**
**இதழ் 18**

ரபியுல் அவ்வல் – 1432
மார்ச் – 2011

**நன்கொடை : ரூ. 5/-**
**ஆண்டு சந்தா : ரூ. 50/**


## இதழின் உள்ளே ......


மீலாது செய்தித் தொகுப்பு... 2
1000 கி.மீ. மஹா பாத யாத்திரை Flowup செய்தி ... 3
கான்காஹே ஆலியா ஒரு முன்மாதிரி தைக்கால்... 4
அஸ்ஹாபே கஹ்ஃப் கலிமா ஓதியது... 5
திருமறையின் தெளிவுரை... 6
புதையல்... 7
சூஃபி ஹஜ்ரத் வருகை... 8
மாநபியின் மணிமொழிகள்... 9
ஆன்மிக எழுத்தாளர்... 10
ஷைகின் அவசியம்... 11
மார்க்க சட்ட விளக்கங்கள்...! 12
கோவை அப்துல் ஜலீல் ஹாஜியாருடன் ஓர் நேர்காணல்...! 15
தர்கா இதழ் கட்டுரைப் போட்டி அறிவிப்பு...! 17
கபரில் அடக்கியபின் மையத்துகள் மாறிப் போன உண்மைச் சம்பவம்... 18
வாசகர் மன்றம்...! 20


## தேவைக்கும்,தொடர்புக்கும்...


M.சையத் அஹ்மத், M.A.,
ஆசிரியர்–சாஹெப் தர்கா இதழ்,
74/176- A, முதல் மாடி, காந்திஜி ரோடு,
இரட்டை மஸ்தான் தர்கா எதிர்புறம்,
தஞ்சாவூர் - 613001
e-mail : editor@sahebdargah.org
www.sahebdargah.org



**Printed by**
Manickam Printers,Thanjavur - 613001

**RNI No. TNTAM/2009/30120**
**Rnp No.SSP/TJ/29/10-12/TJI Posted On 5th day of the Month at Thanjavur H.O.**

அடுத்த வெளியீடு : மே –2011
Please Visit :
www.aulia-e-hind.com


*நாரயே தக்பீர்! அல்லாஹு அக்பர்!!* *நாரயே ரிஸாலத்! யா ரஸூலல்லாஹ்!!* *நாரயே விலாயத்! யா முஹ்யித்தீன்!!*

## இமாம்களின் வழி நடப்போம்...!

நமது அன்றாட வாழ்வில் இஸ்லாமிய நடைமுறை சட்டங்களை இன்று சுலபமாக கடைபிடித்து அல்லாஹ்விற்கும், அவனது ரஸூலாகிய கண்மணி நாயகத்திற்கும் கட்டுப்பட்டு உண்மை முஸ்லிமாக, உயிரோட்டமுள்ள முஃமினாக, வழி தவறாமல் வாழ முடிகின்றது என்றால் அதற்கு முழுக்க முழுக்க காரணகர்த்தாக்களாக விளங்குபவர்கள் நமது மத்ஹபுகளின் நாற்பெரும் சட்ட மாமேதை இமாம்களான இமாம் அபூ ஹனீஃபா, இமாம் ஷாஃபயீ, இமாம் மாலிகி, இமாம் ஹம்பலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகிய நான்கு நாதர் பெருமக்களே...

தித்திக்கும் திருமறையின் 6666 புனித வசனங்கள், சிஹா சித்தா என தொடங்கி, இலட்சக்கணக்கான ஹதீது பொன் மொழிகள், சஹாபா பெரு மக்களின் வாழ்க்கை நடைமுறைகள், முந்தைய நபிமார்களின் வேத வியாக்கியானங்களின் தப்ஸீர் விரிவுரைகள், வலிமார்களின் வழியாய் கால நிலையில் பதிந்த வரலாற்றுச் சுவடுகள் எங்கும் எப்போதும் எந்த சூழ்நிலையிலும் ஏற்படும் சிக்கலான சந்தர்ப்பங்கள், ஈமான் என்ற நம்பிக்கையின் ஆணிவேர் அகீதாக் கொள்கை அஸ்திவாரங்கள்...

இன்னும் இன்னும் எத்தனையோ நிலைமைகளை மனதில் நிறுத்தி, பகுத்தறிந்து, ஆதாரம் தேடி அலைந்து, ஆழமாய் சிந்தித்து, ஊண் உறக்கமின்றி, பற்பல வருடங்கள் நிதானித்து யோசித்து, சர்வசதா நேரமும் அல்லாஹ்வின் அச்சத்தில் மூழ்கி, கண்மணி நாயகம் நபிகள் கோமானின் இஷ்க் என்ற நேசத்தை நெஞ்சத்தில் நிரப்பி, தக்வா என்ற பேணுதலுடன் குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் என்ற அடிப்படைகளை தொகுத்து வழங்கப்பட்டவை தான் ஷரீஅத் சட்டங்களாகும்...

அந்த அடிப்படையிலிருந்து பர்ளு, வாஜிபு, சுன்னத், முஸ்தஹப், ஹலால், முபாஹ், மக்ரூஹ், ஹராம், ஏவல், விலக்கல் நடைமுகைளை பகுத்தளித்தோர் மத்ஹபுகளின் நான்கு இமாம்களே ஆவர்...

இவர்கள் வகுத்தளித்த சட்டங்கள் எந்தவித சச்சரவுகளுமின்றி ஆண்டி முதல் அரசர் வரை வலிமார்கள் முதல் பக்கீர்மார்கள் வரை 1400 ஆண்டுகளாக சங்கையுடன் பேணி பிறப்பு முதல் இறப்பு வரை... ஏன்? மரணத்திற்கு பிறகும் கூட எத்தி வைக்கக் கூடிய நல் அமல்களையும், சட்டங்களாக வகுத்து வழங்கியதால், இன்று வரை சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைகளின் அடிப்படையில் பேணி பாதுகாத்து பிசகாமல் இஸ்லாமிய உலகம் நடந்து வருகிறது.

இந்த நான்கு இமாம்களின் ஷரீஅத் சட்ட கட்டுக்கோப்பு சிதைந்து விடாது நிலைத்திருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக தாம் நினைத்திருந்தால் புதிய மத்ஹபையே உண்டாக்கக் கூடிய தகுதியும், திறமையும் வாய்ந்த மெய்நிலைக் கண்ட ஞானி வள்ளல் கௌதுஸ் ஸமதானி முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்கள் ஷாஃபயி மத்ஹபை பின் பற்றி வந்தவர்கள் ஹம்பலி மத்ஹபு மறைந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக தம்மை ஹம்பலி மத்ஹபில் இணைத்துக் கொண்டார்கள். இந்த இணைப்புக்குப் பின் இமாம் ஹம்பலி அவர்களின் தர்கா ஷரீஃபிற்கு எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் ஜியாரத்திற்க்கு 591 ஆம் ஹிஜ்ரி சென்ற போது சுமார் 200 ஆண்டுகள் முன் மறைந்த இமாம் ஹம்பலி அவர்கள் கபரிலிருந்து வெளி வந்து எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களை கட்டித் தழுவி ஆலிங்கனம் செய்து பாராட்டி மகிழ்ந்த வரலாறு பஹ்ஜதுல் அஸ்ரார் என்ற கிரந்தத்தில் 346 ஆம் பக்கத்தில் பதியப்பட்டுள்ளது.

நான்கு இமாம்களின் மத்ஹபுகளும் அல்லாஹ்வின் திருச் சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவையே என்பதின் உச்ச நிலை ஆதாரமாகும் இச் சம்பவம்.

எனவே எப்போதும் நாம் இமாம்களை போற்றி அவர்களின் ஷரீஅத் சட்டத்திற்கு உட்பட்டு எப்படியும் வாழலாம் என்ற வஹ்ஹாபியத்தை தூக்கி எறிந்து விட்டு இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உண்மை கோட்பாட்டில் சுன்னத் வல் ஜமாஅத் நாற்பெரும் இமாம்களில் ஒருவரை பின்பற்றி ஷரீஅத் வழி நடப்போம். இம்மையிலும், மறுமையிலும் அல்லாஹ் ரஸூலின் திருமுன் ஈடேற்றம் பெறுவோம்.

சிந்திப்போம்! செயல்படுவோம்!! வஸ்ஸலாம்!!!

# கண்மணி நாயகத்தின் மீலாது மௌலூது ஒரு செய்தித் தொகுப்பு...!

வஹ்ஹாபிகள் எவ்வளவுதான் கரடியாய் கத்தி மீலாது மௌலூது பெரு விழாக்களை குறித்து ஷிர்க்கு-பித்அத் ஃபத்வாக்களை கிலோ கணக்கில் வாரி வழங்கினாலும், அந்த சாத்தான்களின் பொய் பிரச்சாரங்களுக்கு மக்கள் செவி சாய்ப்பதில்லை என்பதை உலகம் முழுக்க நடக்கும் உத்தம திரு நபியின் உதய தின மீலாது மௌலூது பெருநாள் மஜ்லிஸ் ஊர்வலங்கள் பறை சாற்றுகின்றன.

**நாகூரில் மீலாது பெருவிழா :**

தமிழக வலிமார்களின் தலைமை பீடமாம் நாகூர் ஷரீஃபில் நாகூர் மீலாதுன் நபி பெருவிழா கமிட்டி சார்பாக அதிகம் ஸலவாத்து ஓதுபவர்களுக்கு பரிசு பொருட்களும், தொடர்ந்து 12 நாட்களும் மீலாது கூட்டங்களும் நாகூர் ஷரீஃப் தெருக்கள் தோறும் ஊர்வலங்களும், சலவாத்துன் நாரியா சபைகளும் இறுதியாக 25.02.2011 வெள்ளிக் கிழமை மீலாதுன் நபி பெருவிழா பொது விருந்தும் சிறப்புடன் நடைபெற்றது.

**தஞ்சையில் மீலாது மஜ்லிஸ் :**

தஞ்சை தரணியில் ஆசாரே ஷரீஃப் தைக்காலில் 16.02.2011 புதன் கிழமை வழமை போல் பெருமானாரின் திருமுடி தரிசனத்தை சையத் ஷாஹ் நியாமதுல்லாஹ் சக்காப் தஅஜீம் தரக் காதிரி ஷுத்தாரி (எ) சையத் முயீன் அஹ்மத் சக்காப் சஜ்ஜாதா நிஷீன் அவர்கள் பொது மக்கள் தரிசனத்திற்கு வைத்திருந்தார்கள். அத்துடன் அரபி, ஃபார்ஸி, உருது, தமிழ் ஆகிய பன்மொழிகளில் நபி பாராயணம் கீதங்கள் நடந்தது.

சென்ற வருடம் போல் தஞ்சை மதீனா பள்ளி இமாம் ஹாஃபிஸ் காஜா முஹ்யித்தீன் அவர்கள் ஹிஸ்புல்லா மக்தபு சிறார்களை மதினா பள்ளியிலிருந்து ஊர்வலமாக ஆசார் தைக்காலுக்கு மீலாது பேரணி நடத்தினார்கள்.

தஞ்சை தாருல் உலூம் கௌஸியா முஹ்தமீமே ஆலா மௌலானா காஜா மெஹ்யத்தீன் ரப்பானி அவர்கள் அதிகம் ஸலவாத்து ஓதியவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்கள்.

**திருச்சியில் மீலாது சொற்பொழிவுகள்...**

திருச்சி மாநகரில் தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் சார்பாக தொடர்ந்து 12 நாட்கள் மீலாது பயான் தொடர் சொற்பொழிவுகள் தமிழிலும், உருதுவிலும் நடைபெற்றது.

**நபிகளாரின் மீலாது விழா நடத்திய நாமக்கல் தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்.**

சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகள் மக்களிடம் போய் சேர வேண்டும் என்ற நன்நோக்கத்தில் தன்னால் இயன்ற பல முயற்சிகளை தர்கா இதழ் செய்து வருகிறது. அப்பணிகளில் ஒன்றாக தர்காக்களின் புகைப்படக் கண்காட்சியும், தேவ்பந்திய தப்லீகிய வஹ்ஹாபிகளின் பித்தலாட்டங்களும், தவ்ஹீத்வாதிய வஹ்ஹாபிகள் போன்றவையே என்பதை பேனர்கள் மூலம் பல விழாக்களில் கண்காட்சிக்கு வைப்பது வஹ்ஹாபிகளின் தவறான கூற்றுக்கு தக்கபதிலடியாய் இருப்பதால் உலகளாவிய தர்காக்களின் புகைப்படக் கண்காட்சி இஸ்லாமியர் களின் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. பயான்களும் கண்காட் சியும் வைக்க வேண்டும் என்று நாமக்கல் தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் சார்பாக அதன் தலைவர் ஆலி ஜனாப் சையத் காதர் பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர் அவர்களும், பொருளாளர் ஆலி ஜனாப் எம்.ஏ. உஸ்மான் அவர்களும் நமக்கு அழைப்புவிடுத்து, மாமறை போற்றும் உத்தம திருநபியின் உதய தினவிழா சொற்பொழிவு நிகழ்ச்சியில் பயான்களுக் கும், உலகளாவிய தர்காக்களின் புகைப்பட கண்காட்சிக்கும் 27.02.2011 ஞாயிற்றுக் கிழமை நாமக்கல் கே.பி.ஆர். திருமண மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

**மினி மீலாது மாநாடு...**

நாம் ஏதோ சிறு விழாவாக இருக்கும் என்று நினைத்துச் சென்றால் மீலாது விழாவை நாமக்கல் மாவட்ட மினி மீலாது மாநாடாகவே சிறப்பாய் நடத்தினார்கள். அது போது உலமாக்க ளின் பயான்களும், தொடர்ந்து பல வருடங்களாக மீலாது மாதத்தில் 12 நாட்கள் மௌலூது ஓதும் குழுவினருக்கு நினைவுப் பரிசுகளும், கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஊக்கப் பரிசுகளும், மாற்று மத சமூகத் தலைவர்களை அழைத்து சொற்பொழிவுகளும் அவர்களுக்கு நினைவுப் பரிசுகளும் வழங்கி பாராட்டும் விதமாக நடத்தினார்கள். மேடை நிகழ்ச்சி அனைத்தையும் ஆலி ஜனாப் ஹாஜி பா. அப்துல் சலாம் எம்.ஏ. எம்.எட்., அவர்கள் அழகிய தமிழில் அரபி உருது பைத்துகளை ஓதி சிறப்பாய் தொகுத்து வழங்கினார்கள். மௌலவி முஹம்மது இப்ராஹீம் சிராஜி, மௌலவி எம்.என். முஹம்மது அலீ ஜின்னா உலூமி, துணைத் தலைவர் நாமக்கல் தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் அவர்கள் தனது கணீர் குரலில் நன்றி கூற விழாவின் நிறைவாக அமைதியாக எல்லோரும் எழுந்து நின்று கண்மணி நாயகத்தின் மீது ஸலாம் பைத்து ஓதி ஃபாத்திஹா துஆவுடன் மீலாது விழா இனிதே நிறைவுற்று தபருக் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. முதல் முறையாக நாமக்கலில் மீலாது பெரு விழா நடந்ததை ஊர் மக்களே சிலாகித்துப் பேசியது தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்தினருக்கு சிறந்த பாராட்டுப் பரிசாகும்.

**சேலம் மாநகரில் பல பகுதிகளில் நடந்த மீலாது விழாக்களும், கந்தூரியும்...**

சேலம் ஜாகிர் அம்மா பாளையத்தில் மஷாயிக்மார் சாதாத்து வம்சத்தினர் வழமை போல் இவ்வாண்டும் மாநபியின் திருமுடி தரிசனத்திற்கும், பாத்திஹா சிறப்பு சொற்பொழிவுகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

சேலம்மாநகர தன்ஜீமே அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத்தின் சார்பாக வழமைப் போல் இவ்வாண்டும் மீலாது விழா பேரணி சேலம் ஜமாமிஆ மஸ்ஜிதிலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக கோட்டை ஸ்டோக்ஸ் ஹால் வந்தடைந்து உலமாக்களின் பயானோடு மீலாது விழா இனிதே நடைபெற்றது.

கேரள முஸ்லிம் அசோஸியே ஷன் மற்றும் சுன்னத் வல் ஜமாஅத் மாணவரமைப்பு இணைந்து நடத்திய மாபெரும் மீலாது விழா பேரணி நகரின் மையப் பகுதியில் மதரஸா சிறார்களும், முஹல்லா வாசிகளும் கலந்து கொண்டனர்.

மாலையில் வெளியூர் உலமாக்கள் வருகை புரிந்து சிறப்பான சொற்பொழிவாற்றினார்கள்.

சேலம் ஷாஹ் ஜலால் புறா மீலாது விழாக் குழுவினரின் சார்பாக மாபெரும் மீலாது விழா நடத்தி சுப்ஹுத் தொழுகைக்குப் பின் கத்தம் ஓதி சுமார் 2000 பேருக்கு அன்னதானம் எனும் தபருக் வழங்கப்பட்டது.

சேலம் முஹம்மது புறா மீலாது விழாக் குழுவினரின் சார்பாக மாபெரும் மீலாது விழா நடத்தி சுப்ஹுத் தொழுகைக்குப் பின் கத்தம் ஓதி முஹம்மது புறா பள்ளியில் தபருக் வழங்கப்பட்டது.

இவ்வாண்டு புதியதாகத் தொடங்கிய முஹம்மது புறா இஸ்லாமிய இளைஞர் பேரவையின் சார்பாக சிறப்பான முறையில் மௌலூது ஓதி ஃபாத்திஹா செய்து தபருக் வழங்கப்பட்டது.

சேலம் ஓமலூர் நான்கு வழிச் சாலையில் மாமாங்கம் அருகில் உள்ள ஹஜ்ரத் மாஸா பீவி அவர்களின் உருஸ் விழாவும், மீலாது விழாவும் வழமை போல் ரபியுல் அவ்வல் பிறை 12 அன்று நடைபெற்றது.

**இங்கிலாந்தில் மீலாது விழா...**

இந்திய தமிழ் முஸ்லிம் நலச்சங்கம் - இது இங்கிலாந்தில் உள்ள இந்திய தமிழ் முஸ்லிம்களின் நலன் மற்றும் ஒற்றுமைக்காக நிறுவப்பட்ட சுன்னத் வல் ஜமாஅத்தின் அமைப்பாகும்.

இச் சங்கத்தின் சார்பாக 19, பிப்ரவரி 2011 அன்று டிரினிட்டி கம்யூனிட்டி சென்டர், கிழக்கு அவென்யூ, மனோர் பார்க், லண்டன் - இங்கிலாந்தில், நபிகள் நாயகம் முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீலாது விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு பொது விருந்தும் அளிக்கப்பட்டது.

**செய்தி விளக்கம் -** smuthahar@gmail.com

# மத நல்லிணக்கத்தையும், மனித நேயத்தையும் வேண்டி பெனுகொண்டா (A.P.) To திருச்சி வரை சுமார் 1000 கி.மீ. மஹா பாத யாத்திரை... Flowup செய்திக் கட்டுரை....

நாம் சென்ற இதழில் உலகில் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம், மனித நேயம் வேண்டி மஹா பாத யாத்திரை என்ற ஒரு செய்தி வெளியிட்டிருந்தோம். அதன் நிறைவு விழா திருச்சி தப்லே ஆலம் பாதுஷா ஹஜ்ரத் நத்ஹர் ஷா வலியுல்லாஹ் அவர்களின் தர்பாரில் *16.01.2011* அன்று சீரோடும், சிறப்போடும் நடைபெற்றது. அதன் செய்தி சுருக்கத்தை இங்கே தருகிறோம்.

**மிஸ்வாக் முளைத்தது...**

திருச்சியில் உள்ள நத்ஹர் வலி தப்லே ஆலம் பாதுஷா தோஹ்ல் சமந்தர் அவர்களின் கலீஃபாக்களில் பிரதானமானவர் ஹஜ்ரத் சையத் பாபா ஃபக்ருத்தீன் வலியுல்லாஹ் ஆவார்கள். அவர்கள் தமது பீரோ முர்ஷிதின் உத்திரவிற்கு இணங்க *1000* ஆண்டுகளுக்கு முன்பு தேச சஞ்சாரம் புறப்பட்டார்கள். **“நீர் செல்லும் இடங்கள் தோறும் இரவு தங்கும் போது இந்த மிஸ்வாக் என்னும் பல் துலக்கும் குச்சியை இரவில் ஊன்றி வைப்பீராக”** என்றும், **“அது காலையில் முளைப்பு கண்டு பச்சை துளிர் விடுமாயின் அதுவே நீர் தங்க வேண்டிய இடமாகும்!”** என்று உத்திரவிட்டு அனுப்பினார்கள்.

அன்று அவர்கள் தங்கிய ஊர் தான் இன்று ஆந்திர மாநிலத்தின் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள பெனுகொண்டா என்ற நகரமாகும்.

**புனிதர்களின் கூட்டம் புறப்பட்டது...**

அண்ணவர்களின் வழித்தோன்றலாக பரம்பரையில் வந்துதித்த ஆலே நபி அவுலாதே அலீ ஹஜ்ரத் சையத் ருக்னுத்தீன் ஹுஸைனி என்கிற தாஜ் பாபா கிப்லா சாஹெபல்லாஹ் அவர்கள் சதர் சஜ்ஜாதா நிஷீன் ஜமா அல்லாஹ் ஃபக்கீர்மார்கள் என்ற நிலையிலே சுமார் 1000 கிலோ மீட்டர் பெனுகொண்டாவிலிருந்து நடை பயணமாக புறப்பட்டு பால சமுத்திரம் கிராஸ், கதிரி, கல்சர்லா, குரம்குண்டா, மதனப்பள்ளி, பலம்னேர், கிருஷ்ணகிரி, மங்கலம், தருமபுரி, சேலம், நாமக்கல் வழியாக திருச்சிக்கு வந்து *15.01.2011* அன்று வியாழக்கிழமை திருச்சி சென்னை நெடுஞ்சாலையில் உள்ள மேனகா மஹாலில் ஏற்பாட்டின் படி இரவு தங்கி மறுநாள் வெள்ளிக் கிழமை ஜும்ஆ தொழுகை முடித்து ஷா பான்வா, ஷா மலங்கு, ஷா மண்டல், ஷா ஜலாலி, அஹ்லே தபகாத்தி, ஷா ரிஃபாயி, ஜமா அல்லாஹ் ஃபக்கீர்மார்களின் முர்ஷிதுகள், சர்கிரோஹ்க்கள், பாஜுதார்கள், கொத்துவால்கள், பண்டாரிகள் மற்றும் சான்றோர்கள், ஆன்றோர்கள் புடைசூழ எல்லா ஃபக்கீர்மார்களும் தத்தமது தரீக்கா ஷைகுமார்களின் தலைப்பாகை அமாமா கட்டி கஃப்னி என்கிற தைக்காமல் போடப்படும் சட்டை அணிந்து கமர்பன்ந் என்கின்ற இடுப்பு துணி கச்கை கட்டி காதிரிய்யா, சிஷ்தியா, நகஷ்பந்தியா, சொஹ்ரவர் தியா பஞ்சதனே பாக்! பஞ்சா ஜஹ்ண்டா -கொடி பிடித்து ஷா பானுவா ஸலவாத்து ஓத ஷா மலங்கு பாங்கா நிபில் ஊத, ஷா ஜலாலி சுமுட்டா பிடிக்க, ஷா ரிஃபாயி டங்கா என்கிற தஃப்பு கொட்டடிக்க கர்தப் என்ற அரேபிய கலை நுணுக்கங்களை செய்த வண்ணம் நகாரா என்ற முரசு கொட்ட நிதா சதா என்ற அசரீரி முழக்கங்கள் கூறப்பட ஃபாத்திஹா ஓதி சதர் சஜ்ஜாத நிஷீன் தலைமையில் நஅதே ஷரீஃப் என்ற நபி கீதங்கள் பாராயணம் படிக்கப் பட ஸலாம் பைத்துகளும் அரபி, ஃபார்ஸி, உருது, தமிழ் மௌலூதுகள் ஓதப்பட சூஃப்பியாக்களின் வழி நடந்த ஃபக்கீர்மார்களின் ஊர்வலம் உண்மையிலேயே உலக அமைதியையும், மத நல்லிணக்கத்தையும் பேணி திருச்சி மாநகர வீதியில் சுமார் *15* கிலோ மீட்டர் நடந்து வந்தது பார்போர் உள்ளங்களை பரவசமடை யச் செய்தது என்றால் மிகையல்ல.

சுமார் நான்கு மணிக்கு திருச்சி - சென்னை ஹைவே டோல்கேட் வழியாக புறப்பட்டு காவேரி பாலத்தை கடந்து திருவாணைக் கோவில் சையத் வலியுல்லாஹ் தர்கா பள்ளிவாசலில் மக்ரிப் தொழுது மெயின் கார்டு கேட் கடை வீதிகள் வழியாக நத்ஹர் நகர் தப்லே ஆலம் பாதுஷா சன்னிதானத்திற்கு இஷா தொழுகைக்கு வந்தடைந்தது. ஊர்வலத்தின் முன்பு ஒரு பெரிய லாரியில் தர்கா போல் அலங்கரிக்கப்பட்ட மேடையில் அல்லாஹ், முஹம்மது, அலீ, ஃபாத்திமா, ஹஸன், ஹுஸைன் என்று அரபி மொழியில் எழுதப்பட்ட கண்ணாடி பேழையினுள் இருந்த கிலாஃப் துணியை...

| | |
|---|---|
| நாரே தக்பீர்...! | அல்லாஹு அக்பர்...! |
| நாரே ரிஸாலத்...! | யா ரஸுலல்லலாஹ்! |
| நாரே ஹைதரி...! | யா அலீ...! |
| நாரே கௌஸியா...! | யா கௌஸ்...! |
| காஜா கா தாமன்...! | நஹீ சோஹ்டேங்கே...! |
| வலியோன் கா தாமன்...! | நஹீ சோஹ்டேங்கே...! |
| இமாமோன் கா தாமன்...! | நஹீ சோஹ்டேங்கே...! |
| சுன்னத் வல் ஜமாஅத்...! | ஜிந்தாபாத்...! |

என்று விண்ணை முட்டும் முழக்கங்களுடன் தர்பாருக்கு சென்று கிலாஃப் போர்த்திய பின் தர்கா மெயின் ரோட்டிலிருந்த பிரமாண்ட மேடையில் நிறைவு விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பெனுகொண்டா சஜ்ஜாதா நிஷீன் தாஜ் பாபா அவர்கள் தலைமை ஏற்க திரு மிகு ஸ்ரீ M.R.ரவி சங்கர் குருஜி அவர்கள், திரு மிகு S.விஷ்வமூர்த்தி அவர்கள், அருள் திரு தாமஸ் பால் சாமி அவர்கள், திரு B.K.பார்த்தசாரதி M.L.A., பெனுகொண்டா (A.P), ஜனாப் அப்துல் கனீ M.L.A., ஹிந்துபுரம் (A.P), திரு பாலே ரகுனாத ரெட்டி M.L.A., பிரசாந்தி நிலையம் புட்டப்பருத்தி (A.P), ஆலி ஜனாப் சையத் குலாம் ரஸுல் பரம்பரை டிரஸ்டி நத்ஹர் வலி தர்கா, ஜனாப் ஜஃபருல்லாஹ் கான், ஜனாப் முஹ்யித்தீன் ஹாஜியார், ஜனாப் ஷெஹின்ஷா மற்றும் பலரும் கலந்து கொண்டு மத நல்லிணக்க சமாதான நடை பயணத்தை பாராட்டி சிலாகித்தும் *34* நாட்கள் உண்மையாகவே நடந்து வந்த சாதனையை புகழ்ந்தும், மனித நேய தேசப் பற்றை விளக்கும் இது போன்ற பயணங்கள் நம் இந்திய திரு நாட்டிற்கு தற்போது தேவையானது என்றும் மகான் சாஹெபல்லாஹ் தாஜ் பாபாவை சிறப்பித்தும் உரையாற்றினார்கள்.

**தேசப்பற்று மிக்க நாடகம்...**

தலைவர் தாஜ் பாபா அவர்களின் நிறைவுரைக்கு பின் தேச ஒற்றுமையை விளக்கும் நாடக கலை ரூபத்தில் ஓர் நிகழ்ச்சியும் நடத்திக் காட்டினார்கள். எல்லோரும் அமர்ந்து அதை பார்த்து நன்றாய் இருந்தால் ஜெய்ஹிந்து என்று சொல்லுங்கள் ஏனெனில் எங்கள் நடை பயணத்தின் நோக்கங்களான...

1) வலிமார்கள், சூஃபியாக்கள், ஃபக்கீர்மார்களின் வழி வந்த அமைதியான இஸ்லாமை எத்தி வைக்க வேண்டும்.

2) மனிதாபிமானமும், மத நல்லிணக்கமும், சமூக ஒற்றுமையும் தழைக்க வேண்டும்.

3) தேசப் பற்று - நாட்டு நலன் மக்கள் உள்ளத்தில் பதிய வேண்டும்.

இவைகளின் சாரத்தை உணர்த்தும் வண்ணம் இந்த ஓரங்க நாடகம் இருக்கும் என்கிற பீடிகையோடு நிகழ்ச்சி தொடங்கியது.

மேடையில் பாறைப் போன்று ஒரு மனித உருவம் இருந்தது. அந்த

தொடர்ச்சி 8 ஆம் பக்கம் காண்க...

خانقاہ عالیہ قادریہ بدایوں شریف تعروف وخدمات

# மார்க்கப் பணியும், மக்கள் தொண்டும் வழி காட்டும் கான்காஹே ஆலியா காதிரிய்யா பதாயூன் தைக்கால் ஒரு முன்மாதிரி...

வட நாட்டில் உள்ள உத்திரப்பிரதேச மாநிலத்திலிருந்து பல நூற்றாண்டுகள் இஸ்லாமிய சிறப்புகள் வாய்ந்த வலிமார்களின் பட்டணமான பதாயூன் நகரத்தில் இஸ்லாத்தின் மூன்றாம் கலீஃபா ஹஜ்ரத் சையதினா உஸ்மான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் புனித பரம்பரையில் வந்து உதித்து சுமார் 800 ஆண்டுகளுக்கு மேல் இஸ்லாத்திற்கு இந்திய திரு நாட்டில் சூஃபியாக்களின் முறையில் தரீக்கத் ரீதியாகவும், ஷரீஅத்தின் கட்டுப்பாடுகளுடன் தொண்டாற்றி வரும் கான்காஹே காதரிய்யா தைக்காலின் சஜ்ஜாதா நஷீன் தாஜ்தாரே அஹ்லே சுன்னத் அவர்களின் அருமை மைந்தனார் அஷ் ஷைகு அல்லாமா உசைதுல் ஹக் ஆசிம் காதிரி கிப்லா பதாயூனி அவர்களின் அன்பான அழைப்பை ஏற்று உரூஸே காதிரி என்னும் பெரிய கந்தூரியில் கலந்து கொள்ள நல் எண்ணத்துடன் நாங்கள் ஒரு குழுவாக வட நாட்டில் உள்ள வலிமார்களின் புனித ஜியாரத்துக்களைச் செய்யும் நோக்கத்தையும் சேர்த்துக் கொண்டு டில்லி, அஜ்மீர் ஷரீஃப், பரேல்வி ஷரீஃப் என்று அலிகார் பயணத்தை அமைத்துக் கொண்டோம். எங்களின் இந்த பயணம் புனித மிக்க பல ஜியாரத்துகளை கண்டதும் நல்ல அனுபவங்களை பெற்று மனதிற்கு நிம்மதியையும் கொடுத்தது. பயணக்கட்டுரையில் அதைத் தொடர்ந்து எழுதுவோம். இதில் கான்காஹே ஆலியா காதிரிய்யா பதாயூன் ஷரீஃபில் அந்த தைக்கால் சார்பாக சாபு மார்கள் செய்யும் செயல்பாடுகளைச் சுருக்கமாக சுட்டிக் காட்டுகிறோம்.

ஹஜ்ரதுல் அல்லாம் தாஜ்தாரே அஹ்லே சுன்னத் ஹஜ்ரத் ஷைகு அப்துல் ஹமீத் முஹம்மத் சாலீம் காதிரி சஜ்ஜாதே நிஷீனாக உள்ளார்கள். அவர்கள் இஸ்லாத்தின் மூன்றாம் கலீஃபாவாகிய ஹஜ்ரத் சையிதினா உஸ்மான் ஜுன்னூரைன் அவர்களின் பாரம்பரிய வாரிசு என்ற முறையில் வந்தவர்கள் ஆவார். இவர்கள் பாரம்பரியத்தில் மார்க்க அறிஞர் பெருமக்களாகவும், வலிமார்களாகவும் மதநல்லிணக் கத்தைப் பேணி சூஃபியத்தை போதிக்கும் ஷைகுமார்களாகவும் கடந்த 800 ஆண்டுகளாக மார்க்க சேவை ஆற்றிவருகிறார்கள். இவர்களின் பெரியோர்களால் திண்ணை மதரஸாவாக தோற்றுவிக் கப்பட்டு பெரும் மதரஸாவாக வளர்ந்து விளங்கும் மதரஸயே ஆலியா காதிரிய்யா புகழ் பெற்ற ஒன்றாகும். இவரின் புதல்வர் அஷ் ஷைகு அல்லாமா உசைதுல் ஹக் ஆசிம் காதிரி பதாயூனி அவர்கள் எகிப்து தேசமான மிசரில் அல் காஹிரா - கெய்ரோ பல்கலை கழகத்தில் முஃபஸ்ஸிருல் குர்ஆன் - திருமறை விரிவுரையிலும், முஹத்திஸ் என்னும் ஹதீஸ் கலையில் தேர்ச்சி பெற்று உருது, அரபி, ஆங்கிலம், பாரசீகம், ஹந்தி ஆகிய மொழிகளில் சரளமாக பேசுவதிலும், எழுதுவதிலும் வல்லமை பெற்றவாராகத் திகழ்கிறார்.

இவர் தேர்ச்சி பெற்று சூஃபிய்யா பாரம்பரிய முறைப்படி கான்காக்களை - தைக்கால்களை நடத்துவதிலும் மதராக்களில் ஷரீஅத் சட்டங்களை பேணி நடப்பதற்காகவும் தேவ்பந்தி தப்லீக், தவ்ஹீத் வஹ்ஹாபிகளின் விதண்டா வாதங்களுக்கு குர்ஆன், ஹதீஸ்கள் மூலம் தனது தனித்துவம் மிக்க பேச்சாற்றலாலும், தனி பாணியான எழுத்து நடையாலும் மக்களை மார்க்கத்திற்கு நேர்வழி காட்டும் மார்க்க அறிஞராகத் திகழ்கிறார். இவர்களின் எழுத்துக்களும், சொற்பொழிவுகளும் இன்று வட நாட்டையே ஒரு கலக்கு கலக்கியுள்ளது.

இந்த காதிரிய்யா தைக்கால் வெறும் சடங்கிற்காக அல்லாமல் நடைமுறையில் இறங்கி இவர் தந்தையாரின் தைக்காலின் பெறுப்பு ஐம்பதாம் ஆண்டு விழா கொண்டாட்டமாக ஆடம்பர செலவுகள் செய்யாமல் மார்க்க சம்பந்தமான ஐம்பது நூல்களை உருது, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் வெளியிட்டு இருக்கிறார்கள். மக்கள் சேவை ஆற்றும் விதமாக வருடத்தில் இரண்டு முறை ஜாதி, மத பேதமின்றி தைக்கால் சார்பாக இலவச மருத்துவ முகாம், ஐந்து நாட்கள் இலவச மருந்துகள் வழங்கியுள்ளார்கள். கண்பார்வை அற்றோருக்கு சோதனை செய்து 275 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கியிருக்கிறார்கள். மீலாது, மௌலூது கொண்டாடி நபிகளார் நன்நடத்தையை எடுத்து கூறுவான் வேண்டி பதாயூன் நகர அரசு மருத்துவமனைக்குச் சென்று நோயாளிகளை ஜாதி, மத பேதம் பாராமல் நலம் விசாரித்து பழங்கள், பிரட் மற்றும் பூங்கொத்து வழங்கி இன்று எங்களது நபிகளாரின் மீலாது நாளாகும். நீங்கள் சீக்கிரம் சுகம் பெற நாங்கள் துஆ செய்கிறோம் என்று அன்புடன் கூறியும், பதாயூன் நகர அரசு பள்ளிகளுக்கு சென்று மாணவர்களுக்கு இனிப்பு வழங்கியும் மீலாது விழாவை சிறப்பித்ததும் கோடை காலங்களில் பேருந்து நிலையம், ரயில் நிலையம் ஆகியவைகளில் தைக்கால் சார்பாக தண்ணீர் பந்தல் நடத்தி முன்மாதிரியாக நடைமுறைப் படுத்தியது உத்திரப் பிரதேச மாநிலத்தையே யார் இந்த தைக்கால் சாபுமார்கள் என்று திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

இதைப் பற்றி அவர்களிடம் கேட்ட போது, இறை நேசச் செல்வர்களான வலிமார்கள் தர்கா கான்காஹ்க்களை - தைக்கால்களை நிறுவிய நோக்கம் இரண்டாகும்.

ஒன்று, மானுடத்தை அன்பால் நேர்வழிப்படுத்தி படைத்தவன் பால் படைப்புகளை மீளச் செய்வது.

இரண்டாவது மானுடத்திற்கு சேவை செய்வதாகும். அதை நாங்கள் செய்வதற்கு முயற்சிக்கிறோம் என்று அமைதியாய் பதில் வருகிறது.

மூன்று நாட்கள் நடந்த உருஸ் விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு காதிரியா தரீகாவின் முறைப்படி கிர்அத் ஓதி, நபி கீதம்பாடி எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை சில்சிலா முறை படித்து ஷரீஅத் சட்ட முறைப்படி மார்க்க பேணுதலுடன் மாபெரும் விழா நடத்தப்பட்டது. கலந்து கொண்ட எல்லோருக்கும் விருந்து உபசரிப்பு குறையின்றி நடத்தப்பட்டது.

தற்கால சூழ்நிலைகளை கருத்தில் கொண்ட தைக்கால், கல்லூரி படிப்புக்காக அல் அஜ்ஹர் இன்ஸ்டிடியூட் மேனேஜ்மெண்ட் அண்டு டெக்னாலெஜி என்று நிறுவி இளைய மகனார் மௌலானா மௌலவி, சாஹெபே சஜ்ஜாதா அத்தீப் காதிரி அவர்கள் மார்க்கப் பயிற்சியுடன் நடத்தி வருகிறார்கள். மதரஸா மாணவர்களுக்கும் தகுதியின்

அடிப்படையில் கணிணி பயிற்சி களையும், ஏழை எளியோருக்கு நல்ல பல உதவிகளையும் இந்த காதிரிய்யா தைக்கால் செய்து வருவதை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தமிழகத்தில் இஸ்லாம் தோன்றிய காலம் தொட்டே தர்காக் களும் இருந்து வருகின்றன. அவை களை நிறுவியதன் நோக்கம் மக்கள் பணியும், மார்க்க தொண்டும் தான்.

தைக்கால், தர்காக்களைச் சேர்ந்த பாரம்பரிய மிக்க தைக்கால் சாதாத்துமார் குடும்பத்தார் தங்கள் பிள்ளைகளுக்கு மார்க்கக் கல்வியும், உலக யதார்த்த நடைமுறைகளையும் போதித்து பதாயூன் காதிரிய்யா தைக்கால் போல் செயல்படுவார்கள் ஆயின் தமிழகத்தில் தேவ்பந்திகளும், தப்லீக்கர்களும், தவ்ஹீத்வாதிகளான வஹ்ஹாபிகளும், சுத்தமாக துடைத்தெறியப்படுவார்கள். ஏனெனில் மற்றவர்களைக் காட்டிலும் பாரம்பரிய மிக்க தைக்கால்வாசிகளின் புனிதத்திற்கு மக்கள் அனைவரும் செவி சாய்பர். அதற்கோர் தனி சக்தியுண்டுதானே. சாஹெப்மார்களின் பாரம்பரியப் பணி தமிழகத்திற்கு கிடைக்க தர்கா இதழ் துஆ செய்கிறது.

# வலிமார்கள் பேசுகிறார்கள்...!

## அஸ்ஹாபே கஹ்ஃப் என்னும் குகைத் தோழர்கள் நம் ரஸூலின் கலிமா ஓதிய வரலாறு...!

சிஷ்தியா தரீகத்து ஷைகுமார்களின் புனிதங்கள் பெற்ற 6 காஜாக்கள் என்று கருதப்படு பவர்களில் ஒருவராகவும், தமது ஷைகு நாயகம் அவர்களால் டெல்லி வலிமார்களின் பீடமாகவும் தனது ஷைகு நாயகம் அவர்களால் மஹ்பூபே இலாஹி - அல்லாஹ்வால் நேசிக்கப்பட்டவர் என்ற புகழுக்குரி யவரும் தாம் வாழ்ந்த காலம்தொட்டு இன்று வரை அவர்கள் வாழ்ந்த பகுதிக்கே பஸ்தி நிஜாமுத்தீன் என அவர் பெயர் சூட்டப்பட்ட பெறுமைக்குரியவரும், இந்தியாவின் தலைநகருக்கு செல்லும் புகை வண்டிக்கு ஹஜ்ரத் நிஜாமுத்தீன் என அவர்களின் பெயர் சூட்டப்பட்டது மான அனைத்து வலிமார்களாலும் புகழப்பட்டவரும், சற்றேரக் குறைய டெல்லியில் ஏழு பாதுஷாக்களின் ஆட்சியை நேரடியாக கண்டவரு மான ஹஜ்ரதே மஹ்பூபே இலாஹி சையிதினா நிஜாமுத்தீன் அவுலியா அவர்களின் நேசம் பெற்ற ஹஜ்ரத் காஜா அமீர் ஹஸன் அலா சிஷ்தி அவர்கள் எஜமானாரின் சன்னி தானத்தில் ஆஜரான போதெல்லாம் ஹஜ்ரத் அவர்களிடம் பாடம் பெற்ற, கேட்ட, பார்த்த, நடந்த சம்பவங் களை சுமார் 10,000 பக்கங்கள் குறிப்பெடுத்து அதில் தாம் முக்கியமாக கருதிய 1,000 பக்கங் களை கோர்வை செய்து ஃபவாயிதுல் ஃபவாத் என்ற நூலாக வெளியிட் டார்கள். அதை சமீபத்தில் ஹஜ்ரத் நிஜாமுத்தீன் அவுலியா மஹ்பூபே இலாஹி குடும்ப பாரம்பரியத்தில் வந்த ஹஜ்ரத் காஜா ஹஸன் சானி நிஜாமி அவர்கள் பாரசீக மூலத்துடன் உருது மொழிப்படுத்தி 2007ல் வெளியிட்டார்கள். அதில் வரும் முக்கிய ஹதீஸை அவுலியாக்கள் பேசுகிறார்கள் என்ற தலைப்பில் வாசகர்களுக்கு வழங்குவதில் தர்கா இதழ் பாக்கியமாக கருதுகிறது.

அமீர் அலா சஜ்ஸி ஆகிய நான் 712வது ஹஜ்ரி ஆண்டு ஹஜ் மாதம் 22ஆம் தேதி வெள்ளிக் கிழமை எனது எஜமானாரான (ஹஜ்ரத் நிஜாமுத்தீன் அவுலியா) மஹ்பூபே இலாஹி அவர்களின் பாதங்களை தொட்டு முத்தம் கொடுக்கும் பாக்கியம் பெற்று ஒரு ஓரத்தில் அமர்ந்து கொண்டேன்.

எஜமானார் அவர்கள் அல்லாஹ்வின் குதுரத்தை பற்றியும், பெருமானாரின் நேசத்தைப் பற்றியும் அமுத மொழிகள் கூறிக்கொண்டி ருந்தார்கள். ஒரு முறை நபிகள் கோமான் கண்மணி நாயகம் ரஸுல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் திருவடியில் யா அல்லாஹ்! உன்னுடைய நேசர்களில் முக்கியமானவர்களாக கருதுகின்ற என் மீது இறக்கி வைத்த திருமறையில் குறிப்பிட்ட அஸ்ஹாபே கஹஃப் என்ற குகை வாசிகளைப் பார்க்கும் நாட்டம் உள்ளதால் அவர்களை சந்திக்கும் பெருமையை இவ்வுலகில் வழங்கு வாயாக என்று துஆ கேட்டார்கள். அதற்கு எல்லாம் வல்ல அல்லாஹ் எனது ஹபீபே அவர்கள் தங்களை சந்திக்கும் பாக்கியம் கியாம நாளுக்காக நான் ஒதுக்கி வைத்துள் ளேன் என்பதால் அந்த குகை வாசிகள் தங்களுடைய தீனுல் இஸ்லாம் மார்க்கத்தை தழுவும் பாக்கியத்தை வழங்குவீராக என்று கூறினான்.

இந்த வாக்குறுதி கிடைக்கப் பெற்ற பின்னால் பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கிலீம் என்ற கம்பளி போர்வையை எடுத்து வந்தார்கள். பிறகு நான்கு ஸஹாபாக்களை அழைத்து கம்பளியின் ஒவ்வொரு மூலையிலும் அமர உத்தர விட்டார்கள். ஒரு மூலையில் முதலாம் கலீஃபா ஹஜ்ரத் அபூ பக்கர் சித்தீக் அவர்களும், ஒரு மூலையில் இரண்டாம் கலீஃபா ஹஜ்ரத் உமர் ஃபாரூக் அவர்களும், ஒரு மூலையில் நான்காம் கலீஃபா ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு அவர்களும், ஒரு மூலையில் ஹஜ்ரத் அபூ ஜர் கஃப்பாரி அவர்களும் அமர்ந்கொண்டார்கள்.

பிறகு காற்று வரும்படி துஆ செய்தார்கள். காற்று வருகை புரியும் போது ஓ காற்றே! நீ சுலைமான் நபியின் கட்டளைப் படி எப்படி பறந்து சென்று பெரும் வேளைகளை எளிதாக்கினாயோ அதைப் போல் இந்த கம்பளி போர்வையுடன் என்னுடைய நான்கு தோழர்களையும் அஸ்ஹாபே கஹ்ஃப் என்ற குகைவாசிகள் இருக்கும் மலைக்கு அழைத்துச் செல்வாயாக என்று உத்தரவிட்டார்கள். காற்றும் அதன்படியே அவர்களை சுமந்து குகைவாசிகளின் தர்கா வாசலில் இறக்கியது. அல்லாஹ்வின் உத்தி ரவால் குகைவாசி வலியுல்லாஹ்க் களான அஸ்ஹாபே கஹ்ஃப் தோழர்கள் உயிர் பெற்று நபி பெருமானாரின் ஸஹாபாக்களுடைய சலாமுக்கு பதில் சலாம் கொடுத்தார்கள். பின்பு நாயகத் தோழர்கள் ஸலாம் உரைத்து அஸ் ஹாபே கஹ்ஃப் அவர்களைப் பார்த்து தாங்கள் எங்களது நபிபெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் உம்மத்தாக வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார்கள். அதை அவர்கள் மிகவும் சந்தோஷத் துடன் ஏற்றுக் கொண்டார்கள்.

அல்ஹம்து லில்லாஹ் ரப்புல் ஆலமீன் இந்த புனிதமும், மேன்மையும், ஆச்சரியமும் கொண்ட இந்த சம்பவத்தை கூறி முடித்தப் பின் எனது எஜமானார் மஹ்பூபே இலாஹி அவர்கள் தனது புனித திருவாயால் அல்லாஹ்வை போற்றி துதித்து அல்லாஹ்வின் குதுரத்தை புகழ்ந்து கூறியதை கேட்ட செவிகள் பாக்கிமிக்கவைகளே.

**நூலின் பெயர்:ஃபாயிதுல் ஃபவாத், பக்கம் : 461, அமுத மொழி : சையிதினா மஹ்பூபே இலாஹி ஹஜ்ரத் நிஜாமுத்தீன் அவர்கள்.**



# علم القرآن يعنى تفسير القرآن

# திருமறையின் தெளிவுரை



உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி கூ.ஃபி

**தக்வா என்றால் என்ன?**

கண்ணியத்திற்குரிய மாபெரும் நிஃயமத்தான நமது உயிரினும் மேலான கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீது பேரன்பு கொண்ட தர்கா இதழின் வாசகர்களே...!

திருமறையின் தெளிவுரையில் குர்ஆனின் புழக்க வார்த்தைகள் எனும் தலைப்பில் ஈமான், இஸ்லாம் எனும் வார்த்தைகளின் விளக்கத்தை கண்டோம். இதில் விவரிக்கப்பட்ட கருத்துக்களை நன்கு மனதில் பதித்திருப்பீர்கள் என கருதுகிறோம். எல்லாம் வல்ல இறைவன் நமது உயிரினும் மேலான கண்மணி நாயகத்தின் பரக்கத்தால் நமது உள்ளத்தை விசாலமாக்கி ஈமானை உறுதிபடுத்துவானாக ஆமீன்!

இந்த இதழில் தக்வா எனும் வார்த்தையின் விளக்கத்தை குர்ஆனின் பார்வையிலேயே பார்ப்போம். இன்ஷா அல்லாஹ்! மார்க்க மேதைகளும் நமக்கு அதிகமாக போதிக்கின்ற ஓர் வார்த்தை தக்வா என்பது. இந்த தக்வா இருந்தால் தான் இருலோகத்திலும் நாம் வெற்றி பெற முடியும். இந்த கருத்தில் பேதங்களுக்கு இடம் இல்லை. தக்வா எனும் வார்த்தையின் பொருளை நாம் சரியாக உணர்ந்து கொண்டால் மட்டுமே இது சாத்தியமாகும். மார்க்கத்தின் பெயரால் நம்மை ஏமாற்றும் அத்தனை கூட்டங்களும் இந்த வார்த்தையைக் கொண்டே சாமான்ய ஜனங்களை வழிகெடுக்கின்றனர்.

சாமான்ய ஜனங்களின் உண்மை ஈமானை நாசப்படுத்த கங்கணம் கட்டிக் கொண்டு திரியும் போலி தரீகாவாதிகளையும், போலி ஆலிம்களையும் தாங்கள் சரியாக அடையாளம் காண வேண்டும். எனவே தக்வா எனும் வார்த்தையின் உண்மை விளக்கத்தை அதில் பொதிந்திருக்கும் இரகஸியங்களை உங்களுக்கு விளக்கித் தருகிறேன். இதன் மூலம் அல்லாஹ் நம்மை உண்மையான தக்வாவை விளங்கி அதன் மீது அமல் செய்வதற்கு தவ்ஃபீக் செய்வானாக. ஆமீன்!

**குர்ஆனில் தக்வா...**

குர்ஆன் ஷரீஃபில் பல இடங்களில் இந்த வார்த்தை வருகிறது. அத்தோடு ஈமானுடன் தக்வா சார்ந்த நிறைய கட்டளைகளும் வருகிறது. தக்வா எனும் வார்த்தையின் பொருள் இரண்டு அர்த்தத்தில் குர்ஆனில் பயன் படுத்தப்படுகிறது.

1. பயப்படுதல்
2. தவிர்த்தல் (அ) தப்பித்தல்.

அல்லாஹ் தன் திருமறையில் கியாமத் நாள் போன்ற வார்த்தைகளுடன் தக்வா எனும் பதத்தை பயன்படுத்தினால் இந்த இடத்தில் பயப்படுதல் என பொருள் கொள்ள வேண்டும். காரணம் அல்லாஹ்வை விட்டோ அல்லது கியாமத் நாளைவிட்டோ எவருமே தப்பமுடியாது. இதற்கான குர்ஆன் வசனங்களை பாருங்கள்.

மெய்விசுவாசிகளே! அல்லாஹ்வை பயப்படுங்கள்.

**(அல் குர்ஆன் 2:278)**

எந்த ஆத்மாவும், எந்த ஒரு ஆத்மாவிற்கும் எதையும் பகரமளிக்க முடியாத அந்நாளை பயப்படுங்கள்.

**(அல் குர்ஆன் 2:48)**

இன்னும் நரகம் பற்றியோ அல்லது பாவம் பற்றியோ பேசப்பட்டால் அந்த இடத்தில் வரும் தக்வா எனும் பதத்திற்கு தப்பித்தல் என்று பொருள் கொள்ள வேண்டும்.

எதன் எரிபொருளாய் மனிதர்களும், கற்களும் பயன்படுத்தப்படுமோ அத்தகைய நரக நெருப்பை விட்டு தப்பித்துக் கொள்ளுங்கள். **(அல் குர்ஆன் 2:24)**

தக்வா எனும் வார்த்தைக்குப்பின் இறைவனைப் பற்றியோ, நரகத்தைப் பற்றியோ, வேறு எதையும் பற்றி கூறப்டாதிருந்தால் அஞ்சுதல், தப்பித்துக் கொள்ளுதல் ஆகிய இரு பொருளும் வழங்கப்படலாம்.

(அல்குர்ஆன்) பயபக்தியாளர் களுக்கு நேர்வழிகாட்டியாகும். அவர்கள் மறைவானதை ஈமான் கொள்வார்கள். **(அல் குர்ஆன் 2:2,3)**

பொறுப்பீராக! நிச்சயமாக இறுதி நல்முடிவு தக்வா உடையோருக்கே.

**(அல்குர்ஆன் 11:49)**

**தக்வாவின் வகைகள்...**

குர்ஆன்னுடைய ஆயத்துக் களை ஆராய்ந்தோமானால் தக்வாவை இருவகையாகப் பிரிக்கலாம்.

**1. உடல் ரீதியான தக்வா**
**2. உளரீதியான தக்வா**

உடல் ரீதியான தக்வாவின் அடிப்படை அல்லாஹ் ரஸூலுக்கு வழிப்படுதலாகும். அல்லாஹ் தன் திருமறையில் கூறுகிறான்...

(அல்லாஹ் ரஸூலுக்கு) அஞ்சி வழிபட்டவர்களுக்கு அச்சமுமில்லை, அவர்கள் கவலையுறவுமாட்டார்கள்.

**(அல்குர்ஆன் 7:35)**

(வலியுல்லாஹ்கள் யார் என்றால்) ஈமான் கொண்டு தக்வாவுடன் இருந்தவர்கள்.

**(அல்குர்ஆன் 10:63)**

அல்லாஹ்விற்கு நீங்கள் வழிப்பட்டால் அவன் உங்களுக்கு வித்தியாசத்தை காட்டித்தருவான்.

**(அல்குர்ஆன் 2:89)**

உள ரீதியான தக்வாவின் அடிப்படையாகிறது...

அல்லாஹ்வின் நேசர்களுக்கும், அவர்களுடன் சம்பந்தப்படுவனவற்றுக்கும் மரியாதையும், கண்ணியத்தையும் மனதில் கொள்வது அந்த நேசர்களுடன் சார்ந்த பரகத் பொருந்தியவைகளை அவமரியாதை எண்ணத்துடன் பார்ப்பவர் தக்வா உடையவராக ஆக முடியாது. குர்ஆனில் வருகிறது பாருங்கள்...

எவர் அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்களை மதித்தாரோ அது தான் இதயத்தின் தக்வா. **(அல்குர்ஆன் 22:32)**

எவர் அல்லாஹ்வின் கண்ணிய வஸ்துகளுக்கு மரியாதை செய்தாரோ அது அவருக்கு அவரது ரப்பிடம் சிறந்ததாகும். **(அல்குர்ஆன் 22:30)**

அல்லாஹ்வின் அடையாளச் சின்னங்கள் எது? என்ற கோள்வியை நாம் குர்ஆனிடமே கேட்டால் நமக்கு கிடைகக் கூடிய பதிலை சிறிது கவனமாக்கப் பாருங்கள்...

**இன்ஷா அல்லாஹ் தெளிவடைவோம்.....**

## புதையல்...12 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தங்களின் தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமா அத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி .

# குறைகளை நீக்கும் குத்பிய்யா! நிறைவினை நல்கும் நல்வழியே!!

***1986ல் இந்திய அஹ்லே பைத்து ஊழியர் மன்றத்தால் வெளியிடப்பட்ட நோட்டிஸ்!***

அல்லாஹு தஆலாவை ரப்பாகவும் தீனுல் இஸ்லாமை சன்மார்க்கமாகவும் முஹம்மது ஸல்லல் லாஹு அலைஹி வ ஆலிஹி வ அஸ்ஹாபிஹி வ ஸல்லம் அவர்களை இறை தூதர் எனும் நபியாகவும் ரஸுலாகவும் முஹ்யித்தீன் அப்துல் காதிர் அல் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை ஈருலகிலும் இனிய, எளிய, இறையின்பப் பாதையில் அழைத்துச் செல்லும் நல் வழிகாட்டியான ஷைகாகவும் முர்ஷிதாகவும் இதயம் கனிய ஏற்றுக் கொண்ட எம் அன்பார்ந்த உடன்பிறப்பே!

அஸ்ஸலாமு அலைக்கும வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹு

எதிர் வந்து இன்னல் நீக்கும் ஏந்தல் முஹ்யித்தீன் ரலியல்லாஹு அன்ஹு என்ற எமது வெளியீட்டைக் கண்டு மகிழ்ந்து, அது அமல் செய்து எண்ணிலடங்கா இறை நேசச் செல்வர்களையும் அவர்களின் நாதாக்களான குத்புமார்களையும் விண்ணோர்களும் மண்ணோர்களும் போற்றிப் புகழ்ந்து அவர் பாதம் தம் தோள் மீது ஏற்றிப் புகழ்கின்ற சீலராம் அண்ணல் அப்துல் காதிர் கௌதுல் அஃலம் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களையும், ஈமானை இதயத்தில் ஏற்றோர்க்கு உயிரினும் இனியவரும் கண் குளிர்ந்த வாழ்விமான இறுதித் தூதர் ஈடிணையில்லா எம் நாதர் ரஸுலே கரீம் முஹம்மத் முஸ்தபா அஹ்மது முஜ்தபா ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களையும் கண் குளிரக் கண்டேன் கனவில் மட்டுமல்ல, நினைவிலும் நேருக்கு நேர் கண்டேன். ஹபீபுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கரும்பினும் கனிவான ஹதீதுகளைக் காதாரக் கேட்டேன் என்று நீ மட்டுமல்ல; உன்னை ஈன்றெடுத்த அன்னையர் போன்றவர்களும், ஏன் உன் கண் காணப் பிறந்த குழந்தைகள் போன்ற வயதினரும் எமக்கு எழுதிய, எம்மிடம் நேரில் கேஸட்டில் பதியும் வண்ணம் உணர்ச்சியுடன் கூறிய நிகழ்ச்சிகள் கடல் அலைபோல் வந்து நன்றி கூறும்போது, உள மாக்கள் என்று தன்னைக் கூறுவோர் ஆம்! உள்ளத்தினால் மிருகம் போன்றோர் இல்லை! இல்லை! அதினும் கேடுகெட்டவர்கள் என திரு மறையால் வர்ணிக்கப்படுவோர் அவர்தம் நேசர்கட்கு, ஆம்! நீசர்கட்கு இருட்டிலிருந்து.... வெளிச்சத்திற்கு! மார்க்கத்தின் பெயரால் மக்கள் மடையர்களாக்கப் படுகின்றனர் என்ற பிரசுரம் கொடுத்து நாதாக்களின் பதுவா க்களைப் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியையும் நீ மறவவதோ!

ஃபத்வா எனும் மார்க்கம் தீர்ப்பு அரபியில் உள்ளது. அது மக்காவில் தரப்பட்டது. அரபியர் தந்தார் என்பதற்காகக் கூட நீ ஒரு போதும் மருண்டு விடமாட்டாயே, ஏன்? உனக்குத் தான் தெரியுமே அபூ ஜஹ்ல் ஃபத்வா கொடுத்தால அரபியில் தானே எழுதுவான், அது மக்காவில் தானே பிரிண்டாகும். அரபியனைத் தானே வினியோகிக்க அனுப்புவான். அப்படியிருக்க இந்த அஜமிகளின் ஃபத்வா உன்னிடம் என்ன பாடுபடும்?

உனக்குத் தெரியாதா? பசித்துன்பத்தைப் போக்குகின்ற நெல் மணிகள் விளைகின்ற வயல் களத்தில் தானே எரி அடுப்பிற்கு நீ ஊட்டுகின்ற பதர்களும் - சாவிகளும் - தோன்றுகின்றன. அவ்வாறிருக்கையில் மறுமையில் எம்பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் முபாரக்கான ஆசியுடன் எமக்கு மன்றாடுகின்ற உலமாயே ரப்பானி எனும் உத்தம சன்மார்க்க சான்றோர்களைத் தோற்றுவிக்கும் கலைக் கூடமாம் மதரஸாக்களில்தான் பெருமானாரின் இதயம் நோகச் செய்கின்ற சண்டாளர்களாமே உலமாயே ஸூஃ எனும் கேடுகெட்ட துன்மார்க்க விற்பன்னர்களும் உருவாகின்றனர் என்பதில் வியப்பு என்ன உள்ளது.

தீனுக்கு உயிரூட்டிய உத்தமர் முஹ்யித்தீன் ஆண்டகை ரலியல்லாஹு தஆலா அன்ஹு திருவுளமாக, ஷரஹுப்புலி சங்கை சான்ற ஸதக்கத்துல்லாஹ் அப்பா ரலியல்லாஹு தஆலா அன்ஹு பிரகடனப் படுத்திய பின்னரும் ஒருவன் அதை மறுத்தால் அவன் ஆலிமா? பெருமானர் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களால் நரகினன் என்று கணிக்கப்பட்ட 72 வகை கூட்டத்தில் சார்ந்த நரகின் நயவஞ்சக நாய்களேயன்றி வேறில்லை.

எவரும், அம்மஹான்களில் எமக்குக் கருத்து வேறுபாடு இல்லை. இது அவர்கள் மீது இட்டுக்கட்டகப்பட்ட இடைசொருகல் என சந்தேகப்பட்டால் அவருக்கு நாம் கூறுவது: குத்பிய்யா குத்பு நாயகரின் போதனை என்பதற்கு எண்ணற்ற கிரந்த ஆதாரங்கள் உள்ளன. எமது ஏடுகளைத் தான் நீர் நம்ப மாட்டீரே! அதற்கு நாம் ஒரு எளிதான முறையினைக் கையாண்டு உண்மையை உலகறியச் செய்யலாம். அதாவது:

ஒன்று: இது அந்நாதாக்களால் நவிலப்பட்ட நன்முறை ஸித்க் என்னும் உண்மைத் தவ்ஹீதாக இருக்கலாம். அல்லது உம் கூற்றுப்படி அவர்கள் மேல் இட்டுக் கட்டப்பட்ட பொய்மை, கித்ப்-ஷிர்க் ஆக இருக்கலாம்.

குத்பிய்யா ஸித்க் என்னும் உண்மை என்பதற்கு எம் சார்ல் ஒரு குடும்பத்தைத் தருகின்றோம். அது கித்ப் எனும் பொய்மை என்பதற்கு மறுக்கின்றவரே, உமக்கு அந்த அஞ் ஞானத்தை யூட்டியவரின் ஓர் குடும்பத்தை யூட்டியவரிடம் ஓர் குடும்பத்தைக் கேளும்.

பொது மக்கள் ஒன்று கூடி திருமறையின் 3 : 61 திருவசனத்தை ஓதி பொய்யர்கள் மீது அல்லாஹ்வின் லஃனத் எனும் சாபத் தீட்டு இறங்குக என மொழிவோம். அத்தகைய சாபம் எவ்வளவு கர்ண கொடூரமான சாபம் எத்தனை நாட்களுக்குள் என்பதனை மறுக்கின்றவரே. நீரே கூறும்; நாம் ஆமீன் ஆமீன் ஏற்றுக் கொள்க இறைவா! என்பதனை மட்டும் கூறி ஏற்போம்.

பின்னர் இறை தீர்ப்பு எவர்பால் என்பதை உலகோர் உணர்ந்து அவர் வழியில் செல்லட்டும். இதனையே நாங்கள் உலக முழுவதிலும் கூறி வருகிறோம். துபாய், அபூதாபி, சார்ஜா, ஸ்ரீலங்கா, சிங்கப்பூர், மலேசியாவின் கண் போன்ற போலாலம்பூரிலும், பினாங்கிலும் பிரகடனப் படுத்தினோம், தமிழத்தின் சந்து பொந்துகளையும் விடவில்லை.

தயக்கம் ஏன்? கடுகளவும் ஈமானில்லாமல் காகிதத்தில் கதையளப்போரே, கருத்தாகக் காரியத்தில் இறங்கி காரிருளைப் போக்கி காத்தமுல் அன்பியா ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் காரியக்காரர் யார் என்பதை அகிலம் அறியச் செய்ய வாரீர் என குத்பியாவைக் குறை கூறும் குறைமதியாளர் நிறைமதி பெற நீவீர் அழைத்து வருக.

**இவண்,**
**இந்திய அஹ்லுல்பைத் ஊழியர் மன்றம்,**
**(பதிவு செய்யப்பட்டது)**
**5, வெங்கட மேஸ்திரி தெரு, சென்னை-1**

ளால்லு முளில்லு தானும் வழிகெட்டு பிறரையும் வழி கெடுப்பவர் என மெஞ்ஞான நாதாக்களால் வர்ணிக்கப்பட்ட இப்னு தைமிய்யா என்பவரின் இரட்டைக் குழந்தைகளான ஜமாஅதே இஸ்லாமி தப்லீக் ஜமாஅத் எமது சவாலை ஓராண்டுக்கும் மேலாக ஏற்க மறுக்கின்றனர். மீண்டும் மறுப்பின் அவர்களை முற்றாகவே புறக்கணித்து விடுக!

எதிர் வந்து இன்னல் நீக்கும் ஏந்தல் முஹ்யித்தீன் மற்றும் பெருமானார் பரிசுத்த குடும்பத்தினரைச் சார்ந்த அஸ்ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை விளக்கம் பிரசுரங்கள் பெற தங்கள் முகவரியிட்ட கவர் அனுப்புகள. எவர்களை எம் உயிரினும் இனிய பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் இஸ்ரவேலர்களின் நபிமார்களுக்கு சமம் என நவின்றார்களோ, அ த் த கை ய ச ன் மா ர் க் க சான்றோர்களின் ஆதாரமிக்க பத்வா விரைவில் வெளிவருகிறது. முற்கூட்டியே உமது முகரியிட்ட தபால் உறை அனுப்பிப் பெறுக.

---

**3 ஆம் பக்க தொடர்ச்சி ...**

இடத்திற்கு ஊன்று கோலுடன் ஒரு முஸ்லிம் வருகிறார். அந்த பாறையை தொழுகையில் அமர்ந்து துஆ கேட்பது போல் செதுக்குகிறார். அடுத்து ஒரு கிருஸ்துவர் அதைப் பார்த்து ஏசு கிருஸ்த்து சிலுவையில் அறையப்பட்டது போன்று மாற்றி செதுக்குகின்றார், ஒரு இந்து அன்பர் வந்து அதை மாற்றி கிருஷ்ணர் புல்லாங்குழல் ஊதுவது போன்று வடிக்கிறார். மூன்று பேரும் சேர்ந்து வந்து பார்க்கும் போது பிரச்சனை உண்டாகிறது. ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். அப்போது தாஜ் பாபா அவர்கள் ஒரு சூஃபி சாதுவைப் போன்று உள்ளே வருகிறார். ஏன் சண்டையிட்டுக் கொள்கிறீர் என்று வினவ அவரவர் தாங்கள் செய்த மத அடையாளங் களைப் பற்றி தெரிவித்து பிரச்சனை யை விளக்குகிறார்கள். நான் ஒரு தீர்வு கூறுகிறேன் என்ற சூஃபி சாது முஸ்லிம் கையிலிருந்த ஊன்று கோலை வாங்கி அந்த உருவத்திடம் கொடுக்கிறார், பாதிரியாரிடமிருந்து கண்ணாடியை வாங்கி மாட்டுகிறார், இந்து அன்பரிடமிருந்து துண்டை வாங்கி போர்த்துகிறார். இப்போது அச்சிலை காந்தி உருவமாக மாறுகிறது.

இது காந்தியின் தேசம். முஸ்லிமாகிய நீர் பள்ளிவாசலில் தொழுகை செய்யவும்! கிருஸ்துவரா கிய நீர் சர்ச்சில் ஜெபம் செய்யவும்! இந்துவாகிய நீர் கோயிலில் சாமி கும்பிடவும்! வெளியில் வந்தால் நாம் எல்லோரும் இந்திய நாட்டவர்!! என காந்தியின் வழியில் பெருமை கொள்வோம். ஜெய்ஹிந்! என்று கூறியவுடன் மக்களின் ஆரவாரமும் கோஷமும் அடங்க வெகு நேரமானது.

**நடைபயணத்தில் இணைந்து கொண்ட நாய்...**

இந்த நடை பயணம் துவங்கிய போது பெனுகுண்டா ஷரீஃபிலிருந்து நடைபயணமாய் கூட்டத்தோடு வந்திருக்கிறது ஒரு நாய். ஏதோ தெரு நாய் விரட்டிவிட்டால் போய் விடும் என்று நினைத்து பல முறை விரட்டியும் அது போகவே இல்லை. திருச்சி வரை அதுவும் இவர்களுட னேயே நடந்து வந்திருக்கிறது.

அதை ஆச்சரியப்பட்டு ஒருவர் கூறிய போது இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது? குர்ஆனிலே யே அஸ்ஹாபே கஹஃப்களைப் பின் பற்றிய நாயைப் பற்றியும், விரிவுரை களில் தெளிவாக பதியப்பட்டுள்ளது. அந்த நாயின் சுன்னத்தை இதுவும் பின்பற்றி வந்திருப்பதில் ஆச்சிரியம் ஒன்றுமில்லை என்று மற்றொருவர் பதில் கூறினார்.

அல்லாஹ்வும், அவனது ரஸுலும், ஔலியாக்களுமே எல்லாம் அறிந்தவர்களாவர்.

பின்கொண்டா ஷைகுமார் கள் வலிமார்களின் வழியில் மத நல்லிணக்கத்தையும், சகோதரத்து வத்தையும், தேசப் பற்றையும் ஓர் உண்மை முஃமினாக - முஸ்லிமாக நீண்ட நடை பயணம் மூலம் நிலை நாட்டியது எவ்வளவு பாராட்டினாலும் தகும். தர்கா இதழ் தனது இதயம் கனிந்த முபாரக்கான நல் வாழ்த்துக்களை சமர்பிப்பதுடன் தமிழகத்தில் இப் பயணம் வெற்றியடைய அயராது பாடுபட்ட ஆலி ஜனாப் N.K.பிரோஸ் கான் அவர்களுக்கும், ஆலி ஜனாப் N.K.M.ரஹீமுத்தீன் அவர்களுக்கும், ஆலி ஜனாப் பிஸ்மில்லாஹ் அலீ ஷா கோம்பூர் ஃபக்கீர் சாஹிப் அவர்களுக்கும், நாமக்கல் வழக்கறிஞர் ஆலி ஜனாப் சையத் காதர் அவர்களுக்கும் ஏணைய நண்பர்களுக் கும், நடைபாதையில் பாதுகாப்பு பணியை செவ்வனே செய்த காவல் துறை அன்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை எவ்வளவு கூறினாலும் தகும்.

தர்கா இதழின் முதன்மை முழக்கமான ரஸுலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்! நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம்!! என்பதற்கு ஏற்ப எல்லோரும் வாழ்வோம்! இறையருள் பெறுவோம்!

## தஞ்சை தரணியில் ஹிஸ்புல்லாஹ் சபை ஸுபி மன்ஜில் நடத்திய ஐந்தாம் ஆண்டு மீலாதுன் நபி விழா மற்றும் புனித கந்தூரி விழாக்கள்

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அய்யம் பேட்டை மற்றும் தஞ்சை நகரின் மையப்பகுதியான கீழவாசல் ஆகிய இடங்களில் முறையே **23.02.2011** மற்றும் **24.02.2011** அன்று மீலாதுன் நபி விழாவும், இமாமுல் ஆரிஃபீனன், சுல்தானுல் வாயிளீன், அஷ்ஷாஹ் முஹம்மது அப்துல் காதிர் ஸுபி ஹஸ்ரத் (ஹைதராபாதி) கத்தஸல் லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களதும், அவர்களது கலீபா அல் ஆரிபு பில்லாஹ் அல் முஹிப்புர் ரசூல் அஷ் ஷைகுல் காமில் ஷைகு அப்துல் காதிர் ஸுபி ஹஸ்ரத் (காயல்பட்டிணம்) கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களதும், அவர்களது கலீபா செய்யதுஸ் ஸாதாத் அஷ் ஷைகு செய்யிது முஹம்மது ஜலாலுத்தீன் பூக்கோயாத் தங்கள் ஹஸனி, ஸுபி,காதிரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களதும் புனித மிகு கந்தூரி விழாக்கள் மௌலானா மௌலவி அஷ் ஷைகுல் காமில் அல்ஹாஜ் முஹம்மத் அலீ சைபுத்தீன் ஆலிம் ஸுபியில் காதிரீயில் காஹிரீய்யி ஸல்ல மஹுல்லாஹு வ மத்தஸில்ல ஹுல் ஆலி அவர்களின் தலைமை யில் சிறப்புற நடைபெற்றது.

அய்யம் பேட்டையில் **23.02.2011** அன்றும், தஞ்சையில் **24.02.2011** அன்றும், மாலை 5 மணியளவில் விழா கொடியேற்றி ஃபாத்திஹா ஓதப்பட்டது. அதனைத் தொடர்ந்து மார்க்க சொற்பொழிவும், மஃரிப் தொழுகைக்குப்பின் காதிரிய் யா ராத்திபு மஜ்லிஸுடன் துஆவும் ஓதி கலந்து கொண்ட அனைவருக்கும் நேர்ச்சை தபர்ருக் வழங்கப்பட்டது.



# أحاديث النبي صلى الله عليه وآله وسلم

## மாநபியின் மணிமொழிகள்

சிஹாசித்தா



**ஹஜ்ரத் அலீயின் சிறப்புகள்...**

மரியாதைக்குரிய வாசகர்களே! சென்ற இதழில் அஹ்லே பைத்து 12 இமாம்களை ஹதீஸ்கள் மூலம் ஆதாரப்பூர்வமாக நிறுவி அவர்களின் பட்டியலில் முதல் இமாமாக கருதப் படும் அலியாரின் சிறப்புகளை கூறியி ருந்தோம். அலியார் அவர்கள் பிறந்த இடம் பைத்துல்லாஹ்வான அல்லாஹ் வின் வீட்டின் மூலப் பகுதியாக கருதப்படும் கஅபதுல்லாஹ்வினுள் பிறந்தார்கள் என்பதைப் பார்த்தோம்.

ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு அவர்களின் சிறப்புகளில் குறிப்பிட்ட சிறப்புகள் என்று சொல்வதானால் அஹ்லே பைத்து களில் ஒருவராகவும் நான்கு கலீஃபாக் களில் ஒருவராகவும், அஹ்லே பைத்து இமாம்களில் முதலாமவராகவும், அஷ்ரயே முபஷ்ஷரா - நபி அவர்களால் சொர்க்கம் செல்ல நிச்சயிக்கப்பட்ட பத்து பேரில் ஒருவராகவும், வீரத்தின் விளை நிலமாகவும், ஞானக் கல்விக் கோட்டையின் நுழைவாயிலாகவும் இப்படி எதிலும் எங்கும் சிறப் புற்றவராகவே திகழ்கிறார் என்றால் அவரின் பிறப்பின் ஒரு அற்புத அதிசய ஒரு ஹதீஸை இங்கு காட்டுகிறோம்.

பெருமானார் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் என்னைப் பார்த்து கூறினார்கள் நம்முடைய ஜிஸ்மு என்ற உடலுக்கு தந்தையான ஆதம் அலா நபியினா அலைஹிஸ் ஸலாம் அவர்கள் படைக்கப்படுவதற்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எல்லாம் வல்ல அல்லாஹ் என்னையும் உன்னையும் ஒரு நூரைக் கொண்டு படைத்தான். ஆதம் இவ்வுலகில் படைக்கப்பட்ட பின் அந்த நூர் ஆதமின் முதுகந்தண்டில் வைக்கப் பட்டது. பின்பு நாம் நல்லோர்களின் முதுகந்தண்டிலும், புனிதமான பெண்களின் கருவறையிலும் தொடர்ச் சியாக மாற்றப்பட்டு ஹஜ்ரத் சையிதினா அப்துல் முதல்லிப் அவர் களிடமிருந்து இரண்டாக பிரிந்து நான் என்னுடைய தந்தையார் ஹஜ்ரத் அப்துல்லாஹ்விடத்தும், நீர் உமது தந்தையார் ஹஜ்ரத் அபூ தாலிபி டத்தும் பிள்ளைகளாய் பிறந்தோம். அலியே எனக்கு நபித்துவத்தையும், ரிஸாலத்தையும் கொடுத்து அல்லாஹ் மேன்மைப்படுத்தினான். உமக்கு கல்வியையும், வீரத்தையும் கொடுத்து சங்கைப்படுத்தினான்.

ஓ, அலியே...! எல்லாம் வல்ல நாயன் தனது திரு நாமங்களிலிருந்து இரண்டை தேர்ந்தெடுத்து நமக்கு சூட்டினான் அல்லாஹ் மஹ்மூதாக இருக்கிறான். எனக்கு முஹம்மத் என பெயரிட்டான். அல்லாஹ் அஃலாவாக இருக்கிறான் உமக்கு அலீ என பெயரிட்டான் என்றார்கள்.

மேற்கண்ட வியத்தகு ஹதீஸைப் ஹஜ்ரத் இப்னுஸ் சபூ அல் உன்துலூஸி அவர்கள் தன்னுடைய புனித கிரந்தமான ஷிஃபாவில் அலியாரின் கல்வியும், வீரமும் என்ற அத்தியாயத்தில் பதிவு செய்கிறார்கள்.

**கைபர் கோட்டை கதவை வீசி எறிந்த வீரர் ஹஜ்ரத் அலீ...**

அடுத்து ஹஜ்ரத் அலீயாரின் வீரத்தை போற்றும் முக்கிய ஒரு ஹதீஸை கூறுகிறோம். இந்த ஹதீஸானது வரலாற்று ரீதியாகவும், கைபர் யுத்தத்தின் போது நடந்த சம்பவத்தில் பல ரிவாயத்துகளிலும் தெளிவான ஆதாரங்களுடன் குறிப் பிடப்பட்டுள்ளது என்பதால் ஹஜ்ரத் அலீ அவர்களின் வீரத்திற்கு சாட்சி யாய் ஹதீஸ்களின் கோர்வையுடன் சாரத்தை எழுதுகிறோம்.

கைபர் யுத்தத்தைப் பற்றி வரலாற்றிலும், ஹதீஸ் கிரந்தங்களிலும் மிக தெளிவாகவே வந்துள்ளது. ஏழாம் ஹிஜ்ரி ஆண்டில் கைபர் யுத்தத்தில் அதி அற்புத சம்பவம் ஹஜ்ரத் அலீ அவர்களின் 41வது வயதில் நிகழ்ந்தது என்பதாக ஆதாரப்பூர்வமாக தெரிய வருகிறது. யூதர்களின் கைபர் கோட்டையை இஸ்லாமிய படை பல நாட்கள் முற்றுகையிட்டும் வெற்றி கிடைக்கவில்லை. பெருமானார் அவர்கள் இஷா தொழுகைக்குப் பின் இப்படி அறிவிப்பு செய்கிறார்கள். புரைதா அஸ்லமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்...

கைபர் போரின் போது ஹஜ்ரத் அபூ பக்கர் சித்தீக்கிடம் கொடி வழங்கப்பட்டதாகவும், பின்பு ஹஜ்ரத் உமரிடம் வழங்கப்பட் டதாகவும், ஆனால் வெற்றிகிட்ட வில்லை என்பதால் நாளை நான் ஒருவரிடம் கொடியை வழங்குவேன் அவர் வெற்றியோடு திரும்புவார் என்று நபிகளார் கூறினார்கள். மறுநாள் காலை ஃபஜர் தொழுகைக்குப் பின் அலியாரை பெருமானார் அழைத் தார்கள். கண் வலி என்பதால் கைத்தாங்கலாக இரு சஹாபிகள் பெருமானாரிடம் ஹஜ்ரத் அலீ அவர்களை அழைத்துவந்தார்கள்.

அப்பொழுது தம் கண் வலி கஷ்டத்தை கூறியபோது பெருமானார் அவர்கள் தமது உமிழ் நீரை அலியாரின் கண்களில் தடவினார்கள். அதற்குப் பின் ஹஜ்ரத் அலீ அவர்கள் கூறினார்கள். உடனே என் கண் வலி போய் விட்டது மட்டுமல்லாமல் என் கண் பார்வை முன்பை விட தெளிவாக தெரிந்தது. ஹஜ்ரத் அமர் இப்னு ஆஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள். கைபர் யுத்தத்தின் போது கோட்டையின் கதவை ஒரு கையால் பிடித்து எடுத்த ஹஜ்ரத் அலீ அவர்கள் அதை நாற்பது கஜ தூரம் வீசி எறிந்து வெற்றி பெற்றார்கள் என்று ஒரு ரிவாயத்திலும், கோட்டை கதவையே கேடயமாக்கி போர் புரிந்தார்கள் என்று மற்றொரு ரிவாயத்திலும் கைபர் போர் பற்றி சஹாபாக்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

**நாற்பது மலக்குமார்களின் சக்தி...**

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ரு இப்னு ஆஸ் கூறுகிறார்கள். ஹஜ்ரத் அலீயார் அவர்கள் இந்த போரில் வெற்றி பெற்றதை நான் ஆச்சரியமாக பார்க்கவில்லை. ஆனால் நாற்பது கஜ தூரம் தூக்கி வீசப்பட்ட கோட்டையின் கதவை நாங்கள் நாற்பது பேர் சேர்ந்து தூக்கினோம். எங்களால் அசைக்கக் கூட முடியவில்லை. இதைப் பற்றி நாங்கள் நபிகள் கோமான் கண்மணி நாயகத்திடம் சிலாகித்து கூறிய போது எம்பெருமானார் கூறினார்கள் எந்த அல்லாஹ்விடம் எனது உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக அவனே அலியாருக்கு வீரத்தை வழங்கி நாற்பது மலக்குமார்களின் சக்தியை வழங்கினான் என்றார்கள்.

இந்த நீண்ட சம்பவத்தை நாம் சுருக்கி கொடுத்துள்ளோம். இந்த வரலாற்றை ஹஜ்ரத் அலீ இப்னே புர்ஹான் அல் ஹல்பீ அஷ் ஷாபயீ அவர்கள் சீரத்துல் ஹலபியாவில் தெளிவாக கூறியுள்ளார்கள்.

**இன்ஷா அல்லாஹ் மேலும் மொழிவோம்.....**

# அறிந்து கொள்வோம் ஆன்மிக இலக்கிய எழுத்தாளரை...!

**வாழும் காலத்தில் ஆலி ஜனாப் ஷாஹுல் ஹமீது முஹ்யித்தீன் அடிமை அவர்களைப் பாராட்டி அவரின் சிறு கட்டுரையை வெளியிடுவதில் தர்கா இதழ் பெருமை கொள்கிறது.**

*17* வயதில் எழுத்துத் துறையில் ஈடுபட்ட முஹ்யித்தீன் ஷாஹுல் ஹமீத், கடந்த 33 ஆண்டு காலமாக, ஆன்மிக இலக்கியப் பணிகளைச் செய்து கொண்டு வருகிறார். அனைத்துச் சமயச் சார்பற்ற இறையுணர்வியல் இலக்கியச் சொற்பொழிவுகளைத் தொடர்ந்து பல ஆலயங்களிலும், பொது இடங்களிலும் நிகழ்த்தி வரும் இவர், சென்னை வானொலியிலும், தொலைக்காட்சியிலும் பல முறை உரையாற்றியுள்ளார். முஹ்யித்தீன் பிரபு ஆன்மிக இலக்கிய சங்கம், குணங்குடி மஸ்தான் ஆன்மிக இலக்கிய மன்றம், தமிழ்நாடு இறைகழல் மன்றம் ஆகியவற்றின் அமைப்பாளராகவும், புரவலராகவும், அகில இந்திய சாயி சமாஜம், தமிழ்நாடு அனைத்துச் சிறு பத்திரிகையாளர் சங்கம் ஆகியவற்றின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார்.

*1988* ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிக்கையாளர் என்ற விருதை V.G.P நிறுவனமும், *1989*ஆம் ஆண்டு இறைநேசச் செல்வர் என்ற விருதைத் தமிழ்நாடு ஆன்மிகப் பேரவையும் இவருக்கு வழங்கியுள்ளன.

தாய்மொழியான தமிழைத் தவிர, ஆங்கிலம், அரபி ஆகிய மொழிகளில் எழுத்தறிவு பெற்றுள்ள இவர், இதுவரை ஆன்மிகப் பேரரசர் முஹ்யித்தீன் பெருமான், இறை காதல், மதமும் மனித குலமும், சமயங்கடந்த சத்திய மூர்த்திகள், குணங்குடி கண்ட ஞானரதம், கீதை காட்டும் பாதை, திருவாசகத் தேன், அருட்பா அமுதம், இறையோடு உரையாடல் ஆகிய இலக்கியங்களை உருவாக்கியுள்ளார்.

சமயக்கட்டுரை எழுதுவது எப்படி என்பதை விரிவாக அவர் தொகுத்துத் தரும் விஷயங்களை இங்கே நாம் பார்ப்போம்.

சமயம் என்ற சொல்லைப்பற்றியும், அதைச் சார்ந்த சில முக்கியக் கருத்துக்களைப் பற்றியும், சிறிது விளக்கமாகப் பார்த்தாக வேண்டும்.

அதாவது சமயம், மதம் என்ற சொற்கள் எல்லாம் இன்றைய நிலையில் பல தவறான மதிப்பீடுகளுக்கு ஆளாகி அல்லல் பட்டுக் கொண்டிருக்கின்றன.

**மதம் என்றால் என்ன?**

மதம் என்ற சொல்லை "தான்" என்ற உணர்வுக்கும் "சமயம்" என்பதற்கும் பயன்படுத்தி வருகிறோம். ஏறக்குறைய இரண்டுமே ஒரே அடிப்படையிலான கருப்பொருளைக் கொண்டவைதாம்.

அதாவது மதம் என்றால் "தான்" என்ற தன்னுணர்வு என்பது தான் பொதுவான பொருள். அது தன்னுடைய சமய இலட்சியமாகவும் இருக்கலாம், "தான்" என்ற வேறு விதமான உணர்வாகவும் இருக்கலாம்.

**உபநிஷத்துகள்...**

ஒன்றுமில்லாத மாசு மறுவற்ற தூய வெளியில் (ஆதிக்குமுன் அநாதியாக) இருந்த ஆதிப்பரம் பொருள் "தான்" என்ற தன்னுணர்வுடன் தன்னை - அணுமுதல் அண்ட சராசரங்கள் வரை - பலவாறாக - பல்லாயிரம் கோடி கோடியாகத் தன்னைத் தானே பகிர்ந்து பல்கிப் பெருகச் செய்து (நம்மையெல்லாம்) படைத்துத் தன்னைத்தானே வெளிப்படுத்திக் கொண்டது என்று உபநிஷத்துகள் சொல்கின்றன.

அந்த ஆதிப்பரம்பொருளுக்கு இருந்த, அதே தன்னுணர்வு அதன் துளிகளான ஒவ்வொர் உயிர்த்துணுக்குகளிடமும் அப்படியே தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

தான் - என்ற தன்னுணர்வு மூலத்தில் இருந்து வந்த எல்லா உயிர்களும் - குறிப்பாக மனித ஆன்மாக்களும், அதே தன்னுணர்வுடன் தன் மூலத்தைச் சென்றடைய முயலும் இலட்சியந்தான் ஆன்மிகம் என்ற இறையுணர்வு இயல். அந்த இலட்சிய இயலை எடுத்துச் சொல்லும் வழிமுறைகளாக சமயங்களுக்கு, மூலக்கருப்பொருளான தன்னுணர்வு என்ற பொருள் பொதிந்த "மதம்" என்ற சொல்லும் சாலப்பொருத்தமே.

**சமயம் என்றால் என்ன?**

சமயம் என்றால் உடன்பாடான ஒரு வழி என்று பொருள்.

அதாவது, ஆன்மிகம் (இறையுணர்வியல்) என்ற குறிக்கோளை அடைவதற்காக அனைவராலும் ஒப்புக்கொள்ளப் பட்ட அனைவருக்கும் உடன்பாடான ஒரு வழி என்ற பொருளைத் தருவது சமயம் என்ற சொல்.

**ரெலிஜியன் – RELIGION**

மதம், சமயம் என்ற வார்த்தைகளுக்கு ஈடாக இன்று நம்மிடையே பயன்படுத்தப்படும் ரெலிஜியன்-Religion என்ற ஆங்கிலச் சொல் ரெலிஜியோ Religioஎன்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வந்ததாகும்.

இந்த ரெலிஜியோ, என்ற சொல்லுக்கு ஒன்று சேருவது அதாவது பிரிந்து நிற்பது ஒன்றாய் சேருவது என்று பொருளாகும்.

ஆக ரெலஜியோ என்ற கிரேக்கச் சொல்லின் வழியாக வந்த ரெலிஜின் என்ற ஆங்கிலச் சொல்லின் அடிப்படை உணர்த்தும் பொருள் பிரிந்து நிற்பது மீண்டும் ஒன்றாக ஆவது என்பதாகும்.

எது பிரிந்தது - எதனோடு சேருவது? ஆதிப்பரம்பொருளான இறைவனிடம் இருந்துதான் எல்லாப் பொருள்களும் - எல்லா உயிர்களும்- எல்லா ஆன்மாக்களும் பிரிந்து பிறந்து வந்துள்ளன. அப்படி வந்தவை அனைத்தும் மீண்டும் தம் மூலப் பொருளான இறைவனுடன் சேர்ந்து இரண்டறக் கலந்து ஒன்றாகி விடுவதுதான் இந்த நிலை!

**இந்து சமய சித்தாந்தம்...**

எது, எங்கே, எப்படி இருக்க வேண்டுமோ, அது, அப்படி, அங்கே இருப்பது சரியான நிலை ; அப்படி யில்லாதது சரியில்லாத குறை நிலை.

இருக்க வேண்டிய இடத்திலே ஒரு பொருள் சரியாக இருப்பது சமச்சீர் முழுமை நிலை. இந்தச் சமச்சீர் முழுமை நிலையைப் பூரணத்துவம் என்கின்றன இந்தியத் தத்துவங்கள். இந்தப் பூரணத்துவம் அடையாமல் இருப்பதே ஒரு களங்கம் (குறைபாடு) இந்தக் குறை உள்ள வரை ஒவ்வொர் உயிரும், மீண்டும், மீண்டும் பிறவி எடுத்துக் கொண்டேதான் இருக்க வேண்டும். பிரிந்தவை ஒன்றாகச் சேர்ந்து பிரிவின் களங்கம் (குறைபாடு) நீங்கி, களங்கமற்ற தூய நிலை ஏற்பட்டால் தான், அது பூரணத்துவம் (முழுமை நிலை ) ஆகும் என்பது ஸதான தர்ம (ஹிந்து சமய) சித்தாந்தம்.

**கிருஸ்துவ சித்தாந்தம்...**

பரம்பொருளும் ஆன்மாக்களும் தனித்தனியாகப் பிரிந்து நிற்கும் இந்தக் குறைநிலையே (களங்கமே) ஒரு பாவம். இந்தக் களங்கத்தின் காரணமாக - பாவத்தின் பயனாக - பூமியில் பிறப்பெடுக்கும் எல்லா உயிர்களும் பாவிகளே என்பது கிறிஸ்துவ சித்தாந்தம்.

எதிலும் பூரணத்துவம் (முழுமை நிலை) ஏற்பட்டால், அங்கே அமைதி நிலைக்கும் சாந்தி நிலவும்.

**இஸ்லாம்...**

இஸ்லாம் என்ற அரபுச் சொல்லுக்கு, முழுமையான சாந்தி (அமைதி) நிலை என்பது

கருப்பொருள்.

அனைத்து உயிர்களும் - அனைத்து ஆன்மாக்களும் - ஆதிபரம்பொருளான இறைவனிடம் இருந்து வந்தவைதாம். இந்த ஆன்மாக்கள் தனித்து நிற்கும் காலமெல்லாம், இது சரியில்லாத குறை நிலை.

இவை ஒவ்வொன்றும் தாங்கள் பிரிந்து வந்த மூலப்பரம் பொருளிடம் சேர்ந்து ஐக்கியமானால் தான் ஒவ்வொன்றும் சரியான நிறை நிலையடைந்ததாகும். இது தான் சமச்சீர் முழுமை நிலை - இது தான் முழுமையான சாந்தி (அமைதி) நிலை. இதற்குப் பெயர்தான் இஸ்லாம்.

யா அய்யுஹன் நஃப்ஸுல் முத்மயின்ன. இர்ஜி இலா ரப்பிகி ராஜியதம் மர்ஜிய்யா.

ஓ, ஆன்மாவே! நீ திருப்தியுறும் வகையிலும், உன்னை அனுப்பியவன் திருப்தியடையும் விதத்திலும் நீ அவனிடமே மீண்டும் சேர்வாயாக என்கிறது குர்ஆன்.

குல்லு ஷையின் யர்ஜிஉ இலா அஸ்லிஹி.

அனைத்தும் தங்கள் அசலை (மூலாதரத்தை) அடைந்தே தீரும்! என்பது நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் திருமொழி.

(இதில் வரும் அஸ்லிஹி என்ற அரபு வார்த்தை நம்மிடையே வழக்கில் உள்ள அசல் என்ற வார்த்தையின் மூலச்சொல்லாகும்.

**அவ்வலுத்தீனி மஅரிஃப துல்லாஹி!**

சமயத்தின் முதன்மையான இலட்சியம் இறைவனை நெருங்கச் செய்யும் ஆன்மிகந்தான் என்று நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் திருவாய் மலர்ந்தருள்கிறார்கள்.

உலகில் உள்ள எல்லாச் சமயங்களும் இந்த அடிப்படை இலட்சியத்தில் ஒன்றுதான். இந்த அடிப்படை ஆன்மிகக் குறிக்கோளைத் தான் எல்லா வேதங்களும் எடுத்துச் சொல்கின்றன.

**(முஹ்யித்தீன் அடிமை அவர்களின் எழுத்துப் பணிக்கு சிறந்த சான்றாய் ஒரு கட்டுரையின் முற்பகுதியைத் தந்துள்ளோம். ஆ-ர்)**

## ஷைகின் அவசியம் பற்றி கௌதுல் அஃலம் ஜீலானி ஆண்டகை....

**ஆக்கம் : தூத்துக்குடி ஏ. செய்யிது இப்ராஹீம் பாஷா (அபுதாபி)**

**ஆயிரம் ஆபிதுகளை விட மேன்மை...**

இம்மை மறுமையின் சௌபாக்கியங்கள் அனைத்தையும் ஆசிக்காது உன் உள்ளம் தனித்து இலங்க வேண்டும். இம் மகோன்னத ராஜ பாட்டையில் தான் நபிமார்கள், தீர்க்க தரிசிகள், ஔலியாக்கள், ஞான நாதர்கள் யாவரும் நடந்தனர். நன்மையை ஏவி தீமையை விலக்கும் புனித சிரோன்மணிகளே ஏகாந்தத்தில் அமர்ந்து மெய்வணக்கம் புரியும் ஆயிரம் ஆபிதுகளை விட மேன்மை தங்கியவர்கள்.

ஞான நாதர்கள் இரட்சகனைத் தவிர வேறு எதையும் உணர்வதில்லை. நண்பர்களை அணுகுவதுமில்லை. ஜீவனோபாய சாதனங்களை குறித்துக் கூட கவலைப் படுவதுமில்லை. மாதக் கணக்காக உணவும் தண்ணீரும் இல்லாவிடினும் பதட்டமில்லாத அவர்களின் புனித நிலையில் சிறு மாறுதலும் ஏற்படுவதில்லை.

இரட்சகனே! அவ்வுத்தம மகான்களுக்கு இரணமளித்துக் கருணைப் பொழிகிறான் அவர்கள் விரும்பும் சம்பத்துகள் அனைத்தையும் வாரி வருஷிக்கிறான். பரம் பொருளையே சத்தியமாக விசுவாசித்து விட்டவர்கள் அவனையே பாக்கியமாக அடைந்து விட நாட வேண்டும். இகத்தின் சௌபாக்கியங்களையோ பதவிகளையோ, சுவனத்தையோ அதன் போகங்களையோ சுகிக்க நினைப்பது கூடவே கூடாது. இவற்றை ஆட்சேபித்தால் அவருடைய ஈமானில் களங்கம் உண்டாகிவிடும்.

விருந்தாளி இறைவனின் சமீபத்துவத்தை அணுகி விட்டால் இறைவனின் புனித ஆக்கினையால் எந்த சம்பத்தையும் வேண்ட அனுக்கிரஹம் தரப்படும். மெய் அன்பர்களின் நிலைமை முடக்கப் பட்டதாயும், ஹக்குத் தஆலாவின் நிலைமை விரிந்ததாயும் கிடக்கின்றன. அவனே மாபெரும் கொடையாளி அடியார்களோ தேவையுள்ளவர்கள் தாம்.

மெய்யன்பர்கள் பரம் பொருளின் அன்பின் தேட்டத்தில் மூழ்கியிருக்கும் வரை ஜீவனோபாயத் ததையும், அருளையும் பணிவுடன் கேட்டுப் பெறும் நிலையில் தான் உள்ளனர்.

இந்த நிலை சீர்பட்ட பின்ரே இறைவனின் நேசம் அவர்களுக்கு சித்தியாகும். அவர்களும் பாக்கிய சாலிகளாய் புண்ணிய சீலர்களாய், சாந்தியாளர்களாய், சிருஷ்டிகளைக் கவரும் மகிமையாளர்களாய் சமைவார்கள். அவர்கள் காட்டிய பொறுமைக்கும், உறுதிக்கும் அல்லாஹ் அருளும் நன்கொடைகளே இவை.

ஹக்குத்தஆலாவை அடியார் கள் பக்தியோடு நேசிப்பதும், அடியார்களை அல்லாஹ் கருணையுடன் அணைத்துக் கொள்வதும், மனிதர்கள் மனிதர்களை விசுவாசிப்பது போல் அல்ல.

**அல்லாஹ்வின் புனித முடுகுதல்...**

அல்லாஹ்வின் புனித முடுகுதல் நெருங்க நெருங்க பக்தி வினயமும் வளர்ச்சிப் பெறுகிறது. அல்லாஹ்வின் மாட்சி மிக்க காட்சி சித்திக்க சித்திக்க இவர்கள் சிரேஷ்ட மௌனிகளாகச் சமைந்து விடுகின்றனர். ஹக்குத் தஆலாவை அகதரிசனம் பெற்ற நாதாக்களின் நஃப்ஸும் சுபாவ சேஷ்டைகளும், பழக்கங்களும் உள்ளமையின் நாவும் ரப்பின் மகத்தான அருட்கொடை களை நினைப்பூட்டி சந்ததமும், நன்றியை வெளியாக்கிக் கொண்டிருக் கின்றன. இதனால் தான் ஞான நாதர்களின் பாதத்தடியில் அமர்வது உனக்கு மிக மிக அவசியம் என்கிறேன். உனக்கு புன்னிய பாக்கியம் சித்திக்கும். அந்த சிரேஷ்டர்களின் புனித இதயங்களில் இருந்து பொங்கும் ஞான அமுதத்தைப் பருகும் அனுக்கிரஹ்மும் சித்திக்கும்.

மகான்களை அணுகி அமர்ந்தோர்கள் தங்கள் நஃப்ஸின் ரகஸியங்கள் விளங்கியவர்களாய் அல்லாஹ்வுக்கே சாஷ்டாங்கமாய் சிரம் சாய்த்து விடுவர். தன் நஃப்ஸின் மகத்தான சூட்சமத்தை விளங்கியவன் தன் நாயனையே அறிந்து விட்டவன் என்பது முது மொழி.

இரட்சகனுக்கும் அடியானுக்கும் இடையில் அடியானின் நஃப்ஸே திரையாகத் தொங்குகிறது. எனவே நஃப்ஸை அறிந்து விட்டவனே சிருஷ்டி கர்தாவுக்கும் முன் பணிவுள்ள அற்ப அடியானாக சமைந்து விடுகின்றான். மகத்தான இந்த ஞானோதயம் சித்தியானதும் அவன் பேணுதலுடன் இருந்து அந்த பாக்கியத்தை அருளியதற்காக ஹக்குத் தஆலாவை துதி செய்கிறான். நஃப்ஸின் அகமியங்களை உணர்வதற்கு உதவிய அல்லாஹ்வே தனக்காக இகபர அருளைச் சொரிந்தான் என்று பரவசமடைகிறான். எனவே தான் ஞான நாதர்களின் புறக்கோலம் அவன் மெய் வணக்கத்தாலும், அகம் அவன் மகிமை கருணை ஆகியவற்றை போற்றுவதாலும் புனிதமடைகின்றன.

**தெய்வ சங்கல்பம்**

அவன் செயல் அவனால் வருஷிக்கப்படும் கஷ்டங்கள் முதலியவற்றின் விஷயத்தில்

**தொடர்ச்சி 14ஆம் பக்கம் காண்க...**

# இஸ்லாமிய மார்க்க சட்ட விளக்கங்கள்...!

(5) مُنْيَةُ الْمُصَلِّى

மார்க்க சட்ட விளக்கங்கள் என்னும் தலைப்பில் வரும் இப்பகுதி ஹனஃபி மஜ்ஹபில் முக்கியமாக கருதப்படும் முன்னியத்துல் முஸல்லி என்ற தொழுகை வழிகாட்டி நூலின் மொழிப் பெயர்ப்பாகும். இது எல்லோருக்கும் பயன்தரும் என்றாலும் குறிப்பாக உலமாக்கள், மதரஸா மாணவர்கள் அரபி சொற்றொடர்களை கோர்வை செய்து படிப்பார்களேயானால் அசல் நூலான முன்னியத்துல் முஸல்லியின் மத்தன் இபாரத் கிடைக்கப்பெறுவார்கள். (ஆ-ர்)

فَسُبْحَانَ اللّٰهِ حِيْنَ تُمْسُوْنَ وَ حِيْنَ تُصْبِحُوْنَ

விசுவாசிகளே! நீங்கள் பகல் உதயமாகும் போதும், மறையும் போதும் (காலையும், மாலையும்) அல்லாஹ்வை துதி செய்து கொண்டிருங்கள். *30:17*

இவ்விடத்தில் தஸ்பீஹ் என்ற பதத்திற்கு தொழுகையென்று பொருள் கொள்ளப்படுகிறது. ஏனெனில் ஐங்காலத் தொழுகையைப் பற்றி குர்ஆனில் கூறப்பட்டிருப்பதை தாங்கள் அறிவீர்களா? என்று ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹூ அன்ஹூ அவர்களிடம் வினவப்பட்ட போது இவ்வாயத்தையே பதிலாகக் கூறினார்கள். சஹாபாக்களில் மிக விளக்க சாலியாக, நபியவர்களின் அநேக ஹதீஸ்களை மனனம் செய்திருப்பவராகயிருந்ததால் இவர்களின் சொல்லிற்கு மதிப்பளிக்கப்படுகிறது.

اِنَّ الصَّلٰوةَ كَانَتْ عَلَى الْمُؤْمِنِيْنَ كِتَابًا مَوْقُوْتًا

நிச்சயமாக தொழுகை குறிப்பிட்ட நேரங்களில் (தவறாமல்) நிறைவேற்றப்பட வேண்டிய கடமையாவே விசுவாசிகள் மீது விதிப்பட்டுள்ளது. *4 : 103*

**கிதாபன் :** كِتَابًا

என்ற இப்பதத்திற்கு கடமை எனப் பொருள் வழங்கப்படுகிறது. ஏனெனில் **குதிப அலைகுமுஸ் ஸியாமு** உங்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது என கிதாபன் என்ற மூல வாசகத்திற்கு கடமையென்ற பொருளையே மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

وَ اَمَّا السُّنَّةُ فَمَارُوِىَ عَنِ النَّبِىِّ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَسَلَّمَ اَنَّهُ قَالَ بُنِىَ الْاِسْلَامُ عَلٰى خَمْسٍ شَهَادَةُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَسُوْلُ اللّٰهِ

சுன்னத் ஹதீஸ்களின் ஆதாரங்களாகிறது நபி ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் மூலம் அறிவிக்கபட்டடதாகும்.

இஸ்லாம் ஐந்து விஷயங்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹூ தஆலாவைத் தவிர வேறு நாயன் இல்லை. நாயகம் ஸல்லல் லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹூவின் தூதர் என்றும் சாட்சி கூறுகிறேன்.

இஸ்லாத்தில் ஐம்பெரும் விஷயங்களில் ஷஹாதத் பகருதல் மிகச் சிறந்ததாகும். ஏனெனில் ஈமானுக்கு இதுவே அடிப்படையாகும்.

وَ اَقَامُ الصَّلٰوةِ وَاِيْتَاءُ الزَّكٰوةِ

**தொழுகையை நிலை பெறச் செய்தல், ஜகாத் கொடுத்தல்.**

ஜகாத் என்ற பதத்திற்குப் பரிசுத்தம், வளர்ச்சி என்று அகராதியில் பொருள் கொள்ளப்படும். மார்க்கத்தில் குறிப்பிட்ட பொருளை அல்லது அதன் விலைமதிப்பை முஸ்லிமாகிய ஏழைக்கு உடமையாக்குதலுக்கு ஜகாத் என்று மார்க்கத்தில் கூறப்படும்.

وَ صَوْمُ شَهْرِ رَمَضَانَ

ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பது.

நோன்பு என்பதற்கு தடுத்துக் கொள்ளல் என்று அகராதியில் கூறப்படும். ஹைல் (மாதவிடாய்) நிபாஸ் (பிரசவத்திற்கு பின் வருகின்ற இரத்தம்) இவைகளை விட்டும் பரிசுத்தமான முஸ்லிம் சுப்ஹூ நேர முதல் மக்ரிபு நேரம் வரை சாப்பிடுதல், குடித்தல், உடலுறவு கொள்ளல் இவைகளிலிருந்து நீங்கி வணக்க வழிபாடு என்ற எண்ணத்தோடு தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு ஸவ்முன் என்று கூறப்படும்.

وَ حَجَّ الْبَيْتِ مَنِ اسْتَطَاعَ اِلَيْهِ سَبِيْلاً

வசதி பெற்றவர் பைதுல்லாஹ்விற்கு செல்லுதல் (ஹஜ்ஜூ செய்தல்)

ஹஜ்ஜூ என்பதற்கு நாடுதல் என்ற பொருள் அகராதியில் காணப்படுகிறது. குறிப்பிட்ட காலத்தில் பைதுல்லாஹ்வை தவாபு செய்தல், குறிப்பிட்ட காலத்தில் அரபாவில் தங்குதல் என்ற இரு கிரியைகளை ஒன்றிணைத்து இஹ்ராம் கட்டினவனாக அறிவுள்ள வசதிபெற்ற முஸ்லிம் கஃபதுல்லாஹ் விற்கு செல்லுதல் என்பதற்கு மார்க்க அடிப்படையில் ஹஜ்ஜூ என்று கூறப்படும்.

வசதியுள்ளோரென்பது :- அன்றாடமுள்ள அடிப்படைத் தேவைகள் போக எஞ்சிய, வாகனம், உணவு இவை கட்கு வசதிப் பெற்றவராவர்.

وَ قَوْلُهُ عَلَيْهِ السَّلَامُ لِكُلِّ شَىْءٍ عَلَمٌ وَعَلَمُ الْاِيْمَانِ اَلصَّلٰوةُ

ஒவ்வொன்றிற்கும் அடையாளமுண்டு. ஈமானின் அடையாளம் தொழுகை என நபி ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

وَقَوْلُهُ عَلَيْهِ السَّلَامُ اَلصَّلٰوةُ عِمَادُالدِّيْنِ فَمَنْ اَقَامَهَا فَقَدْ اَقَامَ الدِّيْنِ وَ مَنْ تَرَكَهَا فَقَدْ هَدَمَ الدِّيْنِ

தொழுகை தீனின் தூணாகும். அதை நிலை பெறச் செய்தவர் தீனினை நிலைப் பெறச் செய்தவரா வார். அதை விட்டவர் மார்க்கத்தை அழித்தவராவார் என நபி ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

தீன் என்பதை ஒரு கட்டிடத்திற்கும், தொழுகை என்பதை தூணிற்கும் குறிப்பிடப்பட்டுள்ளது. தூணின்றியுள்ள கட்டிடம் பரிபூரணமாக அமையாததைப் போன்று தொழுகையற்ற முஃமினின் ஈமான் பரிபூர்ணம் ஆகாது.

وَقَوْلُهُ عَلَيْهِ السَّلَامُ خَمْسُ صَلَوَاتٍ اِفْتَرَضَهُنَّ اللّٰهُ تَعَالٰى عَلَى الْعِبَادِ فَمَنْ اَحْسَنَ وُضُوْعَهُنَّ وَصَلَاهُنَّ لِوَقْتِهِنَّ وَاَتَمَّ رُكُوْعَهُنَّ وَ خُشُوْعَهُنَّ كَانَ لَهُ عَلَى اللّٰهِ عَهْدٌ اَنْ يَّغْفِرَ لَهُ وَ مَنْ لَّمْ يَفْعَلْ فَلَيْسَ لَهُ عَلَى اللّٰهِ عَهْدٌ اِنْ شَاءَ غَفَرَ لَهُ وَ اِنْ شَاءَ عَذَّبَهُ - ابوداؤد شريف

ஐங்காலத் தொழுகைகளை அல்லாஹ் அடியார்கட்டு கடமையாக்கியுள்ளான். அத்தொழுகைக்குரிய ஒலுவை அழகான முறையில் செய்து, அவற்றிற்குரிய நேரங்களில் தொழுது ருகூவு சஜ்தா இவைகளை உள்ளச்சத்துடன் நிரப்பமாக்கி வைக்கின்ற மனிதருக்கு அவர் செய்த பாவத்தை மன்னிப்பதாக அல்லாஹ்வின் உடன்பாடுள்ளது. அவ்வாறு செய்யாவிடில் அல்லாஹ்வின் உடன்பாடு வாக்குறுதி இல்லை. அல்லாஹ் நாடினால் அவனை மன்னிப்பான். நாடினால் அவனை வேதனைக்குள்ளாக்குவான் என நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

**நூல் : அபூ தாவூத் ஷரீஃப்**

وَ قَوْلُهُ عَلَيْهِ السَّلَامُ اَلْفَرْقُ بَيْنَ الْعَبْدِ وَ الْكُفْرِ تَرْكُ الصَّلٰوةِ

முஃமினான அடியானுக்கும், காஃபிரானவனுக்கும் இடையிலுள்ள வேறுபாடு, தொழுகையை விடுவதாகும் என நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

தொழுகை கடமை என்பதற்கு பல ஹதீஸ்களும், தொழுகையின் பால் தனிதனுக்கு உணர்வூட்டும் பல ஹதீஸ்களும் இருக்கின்றன. சில ஹதீஸ்களையே ஆசிரியரவர்கள் இங்கு குறிப்பிட்டுள்ளார்கள்.

وَ اَمَّا اِجْمَاعُ الْاُمَّةِ

**சமுதாயத்தில் ஏகோபித்த முடிவு :-**

فَاِنَّ الْاُمَّةَ اِجْتَمَعَتْ مِنْ لَدُنَّ عَهْدِ رَسُوْلِ اللّٰهِ صَلَّى اللّٰهُ عَلَيْهِ وَ سَلَّمَ عَلٰى فَرْضِيَّتِهَا مِنْ غَيْرِ نَكِيْرٍ وَ مُنْكِرٍ وَلَا مُنَازَعَةِ مُنَازِعٍ

மறுப்பின்றியும், தர்க்கம் செய்வோரின் தர்க்கமின்றியும் தொழுகை பர்லென்பதில் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களது கால முதல் சமுதாயத்தினர் ஒன்று பட்டுள்ளனர்.

فَكَانَ ذٰلِكَ اِجْمَاعًا وَ اِجْمَاعُ الْاُمَّةِ حُجَّةٌ

எனவே இது ஏகோபித்த முடிவாகிவிட்டது. இமாம்களின் ஏகோபித்த முடிவு ஆதாரமாகும்.

குர்ஆன், ஹதீஸ் இவைகளுக்குப் பின் இமாம்களின் ஏகோபித்த முடிவு மிகச்சிறந்த ஆதாரமாகும். ஏனெனில் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் எனது உம்மத்தினர்கள் அநீதமான காரியங்களில் ஒன்று கூடமாட்டார்கள். அவ்வாறே அவர்கள் ஒன்று கூடிவிட்டால் நான் அவர்களை விட்டு நீங்கிவிட்டேன். அவர்கள் என்னை விட்டும் நீங்கி விட்டார்கள் என கூறியுள்ளார்கள்.

ثُمَّ اِعْلَمْ بِاَنَّ لِصَّلٰوةِ شَرَائِطُ قَبْلَهَا وَفَرَائِضُ وَ اَرْكَانًا وَاجِبَاتٌ وَ سُنَنًا وَ آدَابًا وَكَرَاهِيَةٌ وَ مَنَاهِيَ

தொழுகைக்கு முன் சில நிபந்தனைகள் உள்ளன அவை பர்லுகள், வாஜிபுகள், சுன்னத்துகள், ஒழுக்கங்கள், வெறுப்புக்குரியவைகள், தடுக்கப்பட்டவைகள் என்று விளங்கிக் கொள்.

**ஃபராயிள்** فَرَائِضٌ

கடமை என்ற பொருளுடைய ஃபரீஜதுன் என்ற பதத்தின் பன்மையாகும். ஃபர்லை விடுவதின் மூலம் தொழுகை கூடாது. மறுப்பவன் காஃபிராகிக் போவான்.

**அர்கான்** اَرْكَانٌ

இது ருக்னு என்ற பதத்தின் பன்மையாகும். அகராதியில் சிறந்த முறையென்பது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. என்றாலும் பர்லுடைய பொருளை சிலர் இப்பதத்திற்கு மேற்கோள் காட்டுகின்றனர்.

**வாஜிபாத்** وَاجِبَاتٌ

வாஜிப் என்ற சொல்லுக்கு பன்மையாகும். வாஜிபை நிறைவேற்றுவதின் மூலம் கடமை நீங்கும். நிறைவேற்றாவிடில் குற்றமாகும். மறுப்பவளை காஃபிர் என்று கூறப்படமாட்டாது. தொழுகையில் வாஜிபை விடுவதினால் சஜ்தா சஹ்வு செய்வது கடமையாகும்.

**ஆதாப்** آدَابٌ

அதப் என்ற சொல்லின் பன்மையாகும். அதபுகளை பேணுவதினால் தொழுகையில் பயபக்திகளை அதிகரிக்கச் செய்யும்.

நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வழமையாக மேற்கொண்டவைக்கு சுன்னத்தென்று கூறப்படும். வாஜிபை நிறைவேற்றுவதினால் பர்லு பரிபூரணமாகும். சுன்னத்தை நிறைவேற்றுவதினால் வாஜிப் பரிபூர்ணமாகும். அதபு (ஒழுக்கங்)களை பேணுவதினால் சுன்னத் பரிபூர்ணமாகும் என குலாசா என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மக்ரூஹ் இரு வகைகளாகும். சுன்னத்துகளை விடுவதினால் மக்ரூஹ் தன்ஜீஹ் எற்படும். வாஜிபுகளை விடுவதினால் மக்ரூஹ் தஹ்ரீம் ஏற்படும்.

اَمَّاالشَّرَائِطُ فَسِتَّةٌ

**ஷர்துகள் ஆறாகும்.**

اَلطَّهَارَةُ مِنَ الْحَدَثِ

1. சிறு தொடக்கு, பெருந்தொடக்குகிலிருந்து சுத்தம் பெறல்.

طَهَارَةٌ **- தஹாரதுன்** என்றால் சுத்தம் என அகராதியில் பொருள்படும். எவைகளுடன் தொழுவதை மார்க்கம் தடை செய்துள்ளதோ அவைகளைவிட்டும் சுத்தம் பெறுவதென மார்க்கத்தின் பிரகாரம் பொருள்படும்.

حَدَثٌ **ஹதஸ் - தொடக்கு :**

ஒலு அல்லது குளிப்பை கடமையாக்கும் காரியங்களுக்கு கூறப்படும்.

وَالطَّهَارَةُمِنَ النَّجَاسَةِ

2. அசுத்தத்தைவிட்டும் சுத்தம் பெறுவது.

وَسِتْرُالْعَوْرَةِ

3. மர்மஸ்தானங்களை மறைப்பது.

அவசியமின்றி உடலில் எப்பாகத்தை திறப்பதால் தொழுகை கூடாதென்று மார்க்கம் தடை செய்துள்ளதோ அப்பாகத்தை மறைத்தல்.

وَ اسْتِقْبَالُ الْقِبْلَةِ

4. கிப்லாவை முன்னோக்குவது.

وَالْوَقْتُ

5. ஒவ்வொரு தொழுகையின் நேரம் வருதல்.

وَ النِّيَّةُ

6. அல்லாஹ்விற்காக வேண்டியே எல்லா காரியங்களையும் செய்வது.

اَمَّا الطَّهَارَةُ مِنَ الْحَدَثِ

சிறு தொடக்கு, பெருந் தொடக்குகளிலிருந்து சுத்தம் பெறுவதாகிறது,

فَالْاغْتِسَالُ وَالْوُضُوْءُ عِنْدَ وُجُوْدالْمَاءِ وَالْقُدْرَةِ عَلَيْهِ

தண்ணீரையும், அதை உபயோகிக்கச் சக்தியையும் பெறும் போது (சிறு தொடக்கிற்காக) ஒலுச் செய்வது, (பெறுந் தொடக்கிற்காக) குளிப்பது.

وَ عِنْدَ عَدَمِهَاالتَّيَمُّمُ

மேற் குறிப்பிட்ட இரு தன்மைகளையும் இழக்கப்பட்ட நேரத்தில் தயம்மும் செய்து கொள்வதாகும்.

وَ لِكُلٍّ مِنْهُمَافَرَائِضُ وَسُنَنٌ وَآدَابٌ وَمَنَاهِ

ஒலுச் செய்தல், குளித்தல் இவ்விரண்டிற்கும் ஃபர்லு, சுன்னத்து, அதபு, விலக்கல்களும் உள்ளன.

اَمَّافَرَائِضُ الْوُضُوْءِ فَاَرْبَعَةٌ

**ஒலுவின் ஃபர்லுகள் நான்காகும்.**

**இன்ஷா அல்லாஹ்! இன்னும் விளங்குவோம்.....**

**11 ஆம் பக்க தொடர்ச்சி...**

நல்லிணக்கம் காட்டு. நஃப்ஸின் இச்சா பாசங்களை - சுபாவ சேஷ்டைகளை மோகித்து உழலும் வரை அல்லாஹ்வின் அகமியங்களையே, மஹான்களின் மகிமைகளையோ ஒரு காலும் நீ உணர மாட்டாய். ஞான நாதர்களுக்கு முன் நீ ஒரு பைத்தியம் போன்றவன். அவர்களோ மகா அறிஞர்கள். அல்லாஹ்வின் நேசம் என்ற மயக்கம் சம்பூர்ணம் பெற்றதும் தான் அதிலிருந்து தெளிவு பெறும் தருணம் முடுகும்.

முதலில் மெய் வணக்கம், அருளை நாடுதல் என்ற அசைவும் இறுதியில் இறைவனின் தரிசனத்தில் லயித்தல் என்ற அமைதியும் அருளப்படும். இந்த இறை நாதர்கள் எதுவும் தேவைப்படாத நிலையிலா கின்றனர்.

**ஞானம் பெற நாடு...**

அருமை மைந்தனே! நீ மறுமையைக் காணாமல் இம்மையில் தானே புரண்டுகொண்டிருக்கிறார். சிரேஷ்டர்களான அவுலியாக் களையும், உன் சிறு அறிவே சம்பூரணமானது என்று இருமாந்திருப் பதையும் குறித்தே சஞ்சலப் படுகிறேன். தன் சிற்றறிவே மகத்தானது என்று நம்புபவன் நிச்சயம் வழிகெடுவான் என்பது உனக்குத் தெரியாது.

இனி மேல் ஞானம் பெற வேண்டிய தேவையில்லை என்று சொல்லக்கூடியவர் யாரும் இல்லை. ஞானவான் ஒவ்வொருவரையும் மிகைத்த ஞான சிரேஷ்டர்கள் நிச்சயம் இருக்கவே செய்கிறார்கள்.

உங்களுக்கு சிறிது ஞானமே அருளப்பட்டுள்ளது என்று திருமறை போதிப்பதை எண்ணிப்பார் (ஞானம் அருளப்பட்ட உலமாக்களின் மேலான வழிகாட்டலைப் புனிதமாக ஏற்றுக் கொள். எல்லோருடனும் இணக்கமா கப் பழகு. புனிதமான பாதையில் நட. நபி கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் சிரேஷ்டமான பாதையை விட்டு பிசகாமல் வா. மகான்கள் சீர்படுத்தியுள்ள பாதையைப் புறக்கணித்து ஷரீஅத் திற்கு முரணான பித்அத் ஆனதில் இறங்காதே. இதுவே உன் ஈடேற்றத்திற்கு உகந்தது.

இந்த மெய் வழி தான் நஃப்ஸுடைய தீய பாசங்களும் குறுக்கிடா தது. உன் மெய் வணக்கத்தை சித்தியாக்கி மமதையையும், திமிரை யும் ஒடுக்கி சம்பூர்ணமான பணிவோடு உன்னை பரம்பொருளின் அருகிற்கு அழைத்தேகுவதும் இது தான். இந்த மகத்தான குணங்களெல் லாம் உன் பதட்டத்தால் சித்தியாகி விடாது. அதற்கு ஞான மகான்களின் வழிகாட்டலும், பொறுமையும், சகிப்பும், முயற்சியும் தேவைப்படும். ஞானோதயம் பெற்ற மகான்களின் சகவாசத்தில் அமர்ந்திரு. அவர்கள் உன் ஞானத்தைப் பிரகாசிக்கச் செய்து உனக்கு பாதையை துலக்குவார்கள். உன் சுமையை தாங்கள் எற்பார்கள்.

நீ களைத்து விட்டாலும் உன்னை சுமக்க வேறு ஒருவரை நியமித்து ஆணையிடுவார்கள். அல்லது தங்கள் பின்னால் அமர்த்திக் கொள்வார்கள். நீ மெய்யான விசுவாசியாய் சம்பூர்ணம் பெற்று விட்டால் தான் அவர்கள் உன்னை தங்களோடு அமர்த்திக்கொள்வார்கள். அவர்களின் தூய அன்புக்கு நீ அருகதைப் பெற்றதும் தங்களின் புனிதப் பீடத்தில் உன்னை அமர்த்தி விட்டு உன் பின்னால் அவர்கள் அமர்ந்து கொள்வார்கள். அந்த பேரின்பத்தை ருசித்தவனே அதன் மகிமையை உணர முடியும்.

முனாபிக்குகளோடு நட்பு கொள்வதால் ஹக்குத் தஆலாவின் வேதனையும் முனிவும் தான் உன்னை வந்தடையும். அல்லாஹ்வை மெய்யாக தியானிப்பதையும், அவனுக்கும் மற்ற சிருஷ்டிகளுக்கும் உன் ஆத்மா செய்ய வேண்டிய புனித கடமைகளை செய்வதையும் ஒழுங்காக நிறைவேற்றிவா. இம்மை மறுமை இரண்டின் சௌபாக்கி யங்களும், உனக்குத் தேவையானால் உன்னை நன்கு அறிந்தவன் அல்லாஹ் தான் என்பதை உணர்ந்து நஃப்ஸை தூய வணக்கத்தில் ஈடுபடுத்து. அல்லாஹ்வுக்கு மாறு செய்யாமல் சன்மார்க்க ஏவல் விலக்கல்களைத் தூய்மையுடன் நிறைவேற்றுவதுடன். சேதனைகள் வருஷிக்கப்படும் போது நல்லிணக்கம் காட்டவும், மனம் பொருந்தி நன்றி செலுத்தவும் பழகிக் கொள்.

இங்கனம் சிரேஷ்டமடைந்த பின்னரே அல்லாவுக்கும் உனக்கும் இடையில் உள்ள திரைகள் விலகி புதையலை நீ ஏய்தவும் உதவும், இயலும். அந்த மகத்தான படிவத்தில் எந்த திக்கும் உனக்கு இலட்சிய மில்லை.

**இல்மே லதுன்னி...**

எங்கு அமர்ந்துள்ளோம்? எங்கே செல்ல வேண்டும்? என்ற கவலையும் இருக்காது. வழியில் தவறி விழுந்து விட்டாலும் உடனே தூக்கி விடப்படுவாய். அப்போது ஹக்குத் தஆலாவின் அருள் பொங்கிய ஆணையும், ஞான அகமியங்களும், தெய்வ சகாயமும் மனிதர்கள், மலக்குகள், சொர்க்கம் அனைத்தும் உன் ஊழியத்திற்காக காத்து நிற்கும்

ஆகையால் அன்பு மகனே முதலில் மனிதர்களிடம் ஞானம் பெற்ற பின் ஹக்குத் தஆலாவிடம் மெய்ஞானம் அருளப் பிரார்த்தனை செய். தான் கற்றபடி ஒழுகி நடப்பவனுக்கே ரப்புல் ஆலமீன் தன் ஞான அகமியங்களை அருள்வான் என்பது நபிகள் பெருமான் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் அருள் மொழி. சிருஷ்டிகளிடம் கற்பது (சன்மார்க்க ஷரீஅத் கலைகள்) இரட்சகன் அளிப்பது ஞானோதயம் (இல்மே லதுன்னி) இந்த மாண்பு மிக்க மெய் ஞானமே இதயத்தைச் சீர் செய்யும். ஞான மகான்களின் சகவாசம்தான் கல்பை ஒளிப்படுத்தும். ஞான நாதரின் (ஷைக் அல்லாது) மெய் வழி நடக்க முடியாது. வழிகாட்டும் ஆசான் இல்லாமலே ஞான விளக்கம் பெற நாடாதே. சாசன வீட்டில் (இம்மை) வசிக்கும் உனக்கு காரிய சித்தியாக ஆசான் அவசியம். அறிவைப் பெற ஆசைப்படு. அது நீங்காத கடமை ஃபர்ளு. சீனா சென்றேனும் ஞானத்தைப் பெறு என்று கருணை வள்ளல் நபி பெருமானார் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அருளியுள்ளதை சிந்தித்துப் பார்.

அருமந்த செல்வா, நஃப்ஸை சீர்படுத்தும் போராட்ட மார்க்கத்தை காட்டும் மகான்களிடம் பரிபூர்ண வசுவாசங்கொள். ஞான மார்க்கத்தில் ஜெயம் பெற நாடியவன் ஷைகின் ஞான நாதரின் சீர் பாதத்தின் கீழ் உள்ள பூமியாக சமைவது அவசியம்.

**பிரார்த்தனை...**

இரட்சகா! உன்னோடும் உன் மெய் அடியார்களான ஞான நாதர்களோடும் சங்கையுடன் நடந்து கொள்ள வரமருளப் பிரார்த்திக்கிறோம். சாதனங்களின் மீது மட்டும் எங்கள் நம்பிக்கை ஊன்றிவிடும் சோதனையை தந்துவிடாதே. உன் புனித ஏகத்துவம், உன் மீது நாங்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை ( தவக்கல்) உன் ஐஸ்வரியம் உன் மீதே எங்களின் தரிபடுதல் ஆகிய யவற்றையும் அனுக்கிரஹித்து கருணை புரிவாயாக. எங்களின் வணக்கத் திலும், உபதேசத்திலும் சேதனையை வைத்து எங்களை பரீட்சித்து விடாதே. உன் அருளையும் தரிசன பாக்கியத்தையும் எங்களுக்கு அருள்வாயாக. ஆமீன்!

ஸல்லல் லாஹு அலா முஹம்மத் ஸல்லாஹு அலைஹி வ ஸல்லம்! ஸல்லல் லாஹு அலா முஹம்மத் ஸலல்லாஹு அலைஹி வ ஸல்லம்!! ஸல்லல்லாஹு அலா முஹம்மத் யா ரப்பி ஸல்லி அலைஹி வ ஸல்லிம்!!!

**ஆதார நூல்: ஹஜ்ரத் கௌதுல் அஃலம் அவர்களின் ஃபத்ஹுர் ரப்பானி.**

**நன்றி, ஹுஜ்ஜத் : பிப்ரவரி 1980**

# கோவை கோட்டை மேடு பெரியவர் ஆலி ஜனாப் அப்துல் ஜலீல் ஹாஜியார் அவர்களுடன் ஓர் நேர்காணல்...

கோவை அப்துல் ஜலீல் ஹாஜியார் அவர்கள் கோவை கோட்டை மேடு இம்தாதுல் உலூம் மதர்ஸா மற்றும் மஹல்லா பள்ளி தலைவராய் உள்ளார்கள். மிக நீண்ட காலம் கண்ணியமிகு காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் காலம் தொட்டு மார்க்கப் பற்றுதலுடன் சமூக சேவையாற்றி பழுத்த பழமாக, அனுபவங்கள் பல பெற்றவர்களாக, சுன்னத் வல் ஜமாஅத் அகீதா கொள்கைகளில் திடமாக அடிபிறழாது இந்த வயதான காலத்திலும், ஓர் இளைஞனின் சுறுசுறுப்புடனும், மார்க்கப் பற்றுதலுடனும் இன்றும் தம் பணியினை தொய்வின்றி செய்து வருகிறார்கள். அவர்களின் அரை நூற்றாண்டு சமூகப் பணி, அனுபவமிக்க கருத்துக்கள் இக்காலத்தைய இஸ்லாமிய சமுதாயத்திற்கு பயன்கள் பல தரும் என்பதால் ஹாஜியார் அவர்களின் பேட்டியை வாசகர்களுக்கு வழங்குவதில் தர்கா இதழ் பெருமை கொள்கிறது.

நாம் ஹாஜியார் அவர்களைப் பேட்டி காண நம் தர்கா இதழைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொண்டு நமது நிருபரை அனுப்பிய போது தமது அலுவல்களினூடே இந்த வயதிலும் ஒப்புக் கொண்டு அன்போடு இசைந்தார்கள். அவர்களுக்கு நம் இதழ் சார்பாகவும், வாசகர்கள் சார்பாகவும் இதயப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

(ஹாஜியார் அவர்களின் அலைபேசி எண்கள் : *934555166 : 9150041037*

**நாள் : 12.01.2011**
**நேரம் : பிற்பகல் 3மணி...**

**தர்கா இதழ் நிருபர் :** அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹூ...

**அப்துல் ஜலீல் ஹாஜியார் அவர்கள் :** வ அலைக்கும் ஸலாம் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹூ...

**நிருபர் :** நான் தர்கா இதழ் இருமாதம் ஒரு முறை வெளியிடப்படும் இதழில் இருந்து நிருபராக வந்துள்ளேன். தங்களைப் பற்றி ஒரு சிறிய பேட்டி எடுக்கப் போகிறேன்.

**ஹாஜியார் :** மிகுந்த சந்தோஷம்!

**நிருபர் :** தங்களைப் பற்றிய சிறிய அறிமுகம்...

**ஹாஜியார் :** என்னுடைய பெயர் அப்துல் ஜலீல். என்னுடைய தகப்பனார் பெயர் முஹம்மது அப்துல் மன்னான் ராவுத்தர். நாங்கள் நீண்ட காலமாக கோவை நகரத்தில் வாழக்கூடியவர்கள். எங்களது பூர்வீகம் புது நகரம் என்று சொல்லக்கூடிய பாலக்காடுக்கு அருகாமையில் உள்ள ஊர். அதற்கும் முந்தய பூர்வீகம் தென்பாண்டி நாட்டைச் சேர்ந்த மேலப்பாளையம். இங்கு வந்து ஏறக்குறைய 300 வருடங்கள் ஆகிவிட்டது. எங்களது பூர்வீகமான தொழில் தோல் வியாபாரம். இன்று வரை எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தோல் வியாபாரத்தைத் தான் செய்து வருகிறார்கள். நானும் தோல் வியாபாரம் செய்து வருகிறேன். என் மக்களும் என்னுடன் அதையே செய்கிறார்கள்.

**நிருபர் :** தாங்கள் கண்ணியமிகு காயிதே மில்லத் காலத்திலிருந்து சமூக சேவை செய்து வருகிறீர்கள். அதனை தர்கா இதழ் வாசகர்களுக்காக நினைவு கூறுங்களேன்.

**ஹாஜியார் :** காயிதே மில்லத் அவர்கள் மிக உயர்ந்த மனிதர். கண்ணியம் மிக்க மரியாதைக்குரியவர். அதிகமாக சொல்லுவதென்றால் அவருடைய சேவைகளில் எனக்கு தெரிந்ததை சொல்லுகிறேன். அவர் கேரளாவிற்கு அடிக்கடி போய் வருவார். சென்னையிலிருந்து வரக்கூடிய கேரளா செல்லக்கூடிய ரயில் அதிகாலை போத்தனூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு சுப்ஹூடைய நேரத்தில் வரும். நான் இளைஞனாய் இருந்த காலத்தில் அவரைப் பார்த்ததெல்லாம் அவர் ஒலூச் செய்து தஸ்பீஹ் செய்வது தான். அது வல்லாமல் அவர் வேறு அலுவல் செய்ததை நான் பார்க்கவில்லை. இரண்டாவது பல கூட்டங்கள் - கமிட்டி கூட்டங்கள் நடக்கும். அந்த கூட்டங்களில் தொழுகையின் வக்து வந்து விட்டால் குறிப்பாக மக்ரிபுடைய நேரமாக இருந்தால் கூட்டத்தை உடனடியாக ஒத்தி வைத்து பாங்கு இகாமத் சொல்லி உடன் தொழுகையை முடித்து விடுவார்கள். தொழுகையை மிக அச்சத்தோடு கண்ணியமாக பேணி வந்தவர். அவர் வாழ்க்கையில் எளிமையானவர். கோவை வரும் பொழுது மெயில் பத்திரிக்கையை தன் சொந்த செலவில் வாங்கிப் படிப்பார். எந்த ஒரு பொருளையும் மற்றவர் கொடுத்து வாங்கியதாக இல்லை. எந்த உணவைக் கொடுத்தாலும் சாப்பிடுவார். அது வேண்டும், இது வேண்டும் என்று விருப்பத்தைச் சொல்ல மாட்டார். மார்க்க ரீதியில் வாழ்க்கையில் மிக உயர்ந்த கண்ணியத்தைப் பேணியவர். சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் மிகவும் உறுதியானவர். அந்த காலத்தில் சுமார் 1950 வாக்கில் கோவை நகரத்திற்கு வந்திருந்த போது ஆபித் பள்ளிவாசலின் பொறுப்பில் ஒருவராக இருந்த ஷேக் அப்துல்லாஹ் ஆலிம் என்பவரை சந்திக்க வந்தார். அப்பொழுது நாங்கள் அவரிடம் தப்லீக் பற்றி கேட்டபொழுது **தப்பு லீக்கு** அதாவது **தவறான லீக்கு** என்று அவர் வாயால் சொன்னதை நாங்கள் கேட்டு இருக்கிறோம். சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் மிக வலுவானவர். முஸ்லிம் லீக் மேடைகளில் வாயிலாகவும், அவற்றை பிரச்சாரம் செய்தவர்கள். தனிப்பட்ட வாழ்க்கையிலும் எல்லா வகையிலும் சிறப்பானவர். குறை காண முடியாத ஒரு மா மனிதர்.

**நிருபர் :** வஹ்ஹாபிகள் இன்று பல ரூபங்களில் இஸ்லாமிய விரோதப் போக்கை கையாண்டு அராஜகங்களில் ஈடுபடுகிறார்கள். அதில் தப்லீக் ஜமாஅத்தைப் பற்றி தங்களின் கருத்தை பதிவு செய்யுங்கள்.

**ஹாஜியார் : தப்லீக் ஜமாஅத் என்பது குறிப்பாக இல்யாஸ் உடைய தப்லீக் ஜமாஅத் என பொதுவாகச் சொல்லுங்கள். மார்க்கப் பிரச்சாரத்திற்கு தப்லீக் என்று பெயர். மௌலானா இல்யாஸ் என்பவரால் உருவாக் கப்பட்ட வஹ்ஹாபிய கொள்கை யில் ஏற்படுத்தப்பட்டது தான் தப்லீக் ஜமாஅத். அது இஸ்லாமிய அடிப்படை கொள்கைகளுக்கு**

**நேர் விரோதமானது. சுருக்கமாக சொல்ல வேண்டும் என்றால் அல்லாஹ் திருக்குர்ஆனில் யூதர்களைப் பற்றி ஆயத்துகள் இறக்கி சபித்திருக்கிறான். எம்பெருமான் ரஸூலே கரீம் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களைப் புகழ்ந்து இருக்கிறான். ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களை அல்லாஹூ தஆலா புகழ்ந்த வழியில் அவர்களைப் பின்பற்றி வந்த சஹாபாக்கள், தாபயீன்கள், தபவுத் தாபயீன்கள், அவ்லியாக்கள், ஸூஃபியாக்கள், நாதாக்கள், ஆரிஃபீன்கள், குத்புகள், மஹான்கள், ஷூஹதாக் கள், இமாம்கள் இவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றி வந்த ஆலிம்கள் குறிப்பாக ஹனஃபி, மாலிகி, ஷாஃபயீ, ஹன்பலி இந்த நான்கு மத்ஹபுகளில் எதையாவது ஒன்றை தெளிவாக பின்பற்றியவர் கள் தான் உண்மையான முஸ்லிம்களாக இருக்க முடியும். அதற்கு மாற்றமாக அல்லாஹூ தஆலா திருமறையில் புகழ்ந்து ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களைப் பற்றி ஏதாவது ஒரு வகையில் குறை கண்டாலோ, குறைவாக பேசினா லோ அல்லாஹ்வால் சபிக்கப் பட்ட யூத சமுதாயத்தின் ஆதரவா ளர்களால் தான் அந்த காரியத்தை செய்ய முடியும். ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் இந்த உலகத்தில் பிறந்த அன்றைய தினமே கஅபதுல்லாஹ்வில் இருந்த விக்ரஹங்களான லாத்தும், உஜ்ஜாவும் கவிழ்ந்து விழுந்த விட்டன. அன்றிலிருந்து இன்று வரை யூத சமுதாயம் இஸ்லாத் திற்கு விரோதிகள். குறிப்பாக ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் நுபுவத்திற் குப் பிறகு அவர்கள் தொடர்ந்து போராட்டங்களில் பல ரூபங்களில் இயங்கி வருகிறார்கள். அப்படிப் பட்ட யூதர்களின் கைத்தடிகளாக அவர்களைப் பின்பற்றியவர்கள் தான் இன்று இல்யாஸால் உருவாக் கப்பட்ட தப்லீக் ஜமாஅத்.**

**நிருபர் :** இன்றைய அரசியல் சூழ்நிலையில் எப்படி நடந்து கொண்டால் பலனளிக்கும்.

**ஹாஜியார் :** எல்லாக் காலங்களிலும் முஸ்லிம்கள் ஒன்று பட வேண்டும் என்று மார்க்கம் சொல்லுகிறது அதுவும் குறிப்பாக இந்தியாவை பொறுத்த வரை முஸ்லிம்கள் தங்களுடைய உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கு ஒரு அரசியல் ரீதியான அமைப்பை பின்பற்றி வரவேண்டி யது அவசியமாகிறது. நாடு பிரிவினைக்குப் பிறகு இந்த நாட்டில் முஸ்லிம்கள் பல சூழ்நிலைகளால் பல பிரிவுகளாக பிரிந்து விட்டார்கள். இந்த நாட்டிலே ஏறக்குறைய 2 கோடி முஸ்லிம்கள் வாழக் கூடிய இந்திய நாட்டிலே பல உண்மைகளை இழந்து அடுத்தவர்களை அண்டி வாழக் கூடிய சூழ்நிலைகளில் இருக்கிறோம். இப்படிப் பட்ட சூழ்நிலையில் முஸ்லிம்கள் ஒன்று படுவது தான் சிறப்பான பணியாக இருக்கும். அரசியல் என்று சொல்வோமானால் அன்றிலிருந்து இன்று வரை அதாவது 1906ல் இன்றைய வங்காள தேசத்தின் தலைநகரம் டாக்காவில் துவங்கப் பட்ட முஸ்லிம் லீக் மௌலானா முஹம்மத் அலீ ஜவ்ஹர், சௌகத் அலீ, ஹஜ்ரத் மோஹானி, டாக்கா நவாப், போன்ற தலைவர்களும் குறிப்பாக மௌலானா முஹம்மத் அலீ, மௌலானா ஷவுக்கத் அலீ, ஹஜ்ரத் மோஹானி போன்றவர்கள் முழுக்க முழுக்க சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளை அடியொற்றி வாழ்ந்து மறைந்தவர்கள் அவர்களால் உருவாக்கப்பட்டது தான் முஸ்லிம் லீக். அந்த கொள்கையின் அடிப்படையில் ஒரு கால சூழ்நிலையில் நாடு பிரிக்கப்பட்டு போய்விட்டது. அதற்கு முஸ்லிம்களோ, முஸ்லிம் லீக்கோ காரணம் அல்ல. அதற்கு சாட்சியாக பல உண்மைகள் சரித்திரத்தில் காணக் கிடைக்கின்றன. இன்றும் கூட முஸ்லிம்கள் ஒரு பாரம்பரியமிக்க நீண்ட அரசியல் பாரம்பரிய இந்திய யூனியன் முஸ்லிம் லீகில் இணைந்து தங்கள் அரசியல் கோரிக்கைகளை வலுப்படுத்திக் கொள்வது தான் சிறப்பாக இருக்கும். இன்றும் குறிப்பாக முஸ்லிம் லீக்கின் தலைமை அன்று முதல் இன்று வரை முஸ்லிம் லீக்குடைய சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை தெளிவாக கடை பிடித்து வரக்கூடிய அமைப் பாகும். சிலர் அந்த கொள்கைக்கு மாற்றமாக வந்திருந்தாலும் முஸ்லிம் லீக்கின் அடிப்படையான கொள்கை மார்க்கத்தில் சுன்னத் வல் ஜமாஅத்தை பேணி பாதுகாக்கும் கொள்கை யாகும். அதன் அடிப்படையில் முஸ்லிம்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கில் ஒன்றுபட்டு தங்களின் உரிமையை பெறுவது தான் சிறப்பாக இருக்கும். இன்னும் குறிப்பாக கேரளாவில் முஸ்லிம்கள் முஸ்லிம் லீக்கில் தங்களை இணைத்துக் கொண்ட காரணத்தால் நாட்டிலேயே எங்கும் கிடைக்காத ஆலிம்களுக்கு அரசு உத்தியோகம் கிடைத்ததை ஞயாபகத்திற்கு கொண்டு வரவேண்டும். அஃப்ஜலுல் உலமா பட்டம் பெற்றால் அரசு உத்தியோகத்திற்கு தகுதியான வர்களாக ஆக்கப்பட்டது. இந்த உலமாக்களை அதற்கு தகுதியான வர்கள் தான் என்று வாதித்தது தான் முஸ்லிம் லீக்கின் மகத்தான பணி. அரபு நாடுகளுக்கு முஸ்லிம்கள் பல்லாயிரக் கணக்காகனவர்கள் லட்சக்கணக்கானவர்கள் சென்று வாழுகிறார்கள் - பொருளாதாரத்தை ஈட்டுகிறார்கள் என்றால் அந்த பணியினை செய்தது முஸ்லிம் லீக் தான். கேரளாவில் முஸ்லிம்களின் வாழ்க்கைத் தரம் கல்வியில் உயர்ந்திருக்கிறது என்றால் அத்துணை கல்லூரிகளையும் அத்துணை கலாசாலைகளையும் அடிப்படைக் கல்வியான மதரஸாக்களையும் தெளிவான உருவில் உருவாக்கி அதை நடைமுறைப்படுத்துவதற்கான ஊக்கமும் வலுவையும் சேர்த்துக் கொடுத்தது முஸ்லிம் லீக். ஆகவே முஸ்லீகள் தங்களை முஸ்லிம் லீக்கில் இணைத்துக் கொண்டு செயல் படுத்துவதால் தங்களின் உரிமையை பெற முடியும்.

**நிருபர் :** தங்கள் காலத்தில் ஆற்றிய முக்கியப் பணிகளை குறிப்பிடுங்கள்.

**ஹாஜியார் :** நான் ஒரு சாதாரண சமுதாய ஊழியன். ஒரு முஸ்லிம் தன் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் என்னால் இயன்றவரை சில பணிகளை செய்திருக்கிறேன். பொதுவாக மனித நேய அடிப்படையில் ஒரு மனிதன் தான் பிறந்த மனித சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய சேவைகளை இந்த அடியானும் ஏதோ சில சேவைகளை செய்து இருக்கிறேன். அவ்வளவு தான் எனக்காக தனிப்பட்ட முறையில் ஒன்றும் செய்யவில்லை. பொது வாழ்க்கை என்பது - என்னுடைய பொது வாழ்வு - எனக்கு 77 வயதாகிறது. பல அமைப்புகளில் பல ஸ்தாபனங்களில் பொதுத் தொண்டில் பல பொறுப்புகளில் ஈடுபட்டு வருகிறேன். அல்லாஹ்வின் கிருபையைக் கொண்டு, ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் பொருட்டைக் கொண்டு பெரியோர்களின் துஆவைக் கொண்டு பல மதரஸாக்களில் பல கல்வி ஸ்தாபனங்களில் என்னுடைய சேவையைச் செய்திருக்கிறேன். என்னால் இயன்ற பணிகளை ஆற்றி வருகிறேன். இப்படி சமூகத்திற்காக என்னால் இயன்றவரை பல சமூகத்

தொண்டுகளையாற்றி வருகிறேன்.

**நிருபர் :** இன்றைய பள்ளிவாசல் முதவல்லிகள், சமூகத் தலைவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தாங்கள் கருதுகிறீர்கள்.

**ஹாஜியார் :** அல்லாஹ்வுக்கு அச்சப்பட்டு ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்கள் காட்டிய வழியிலும் அவர்களைப் பின்பற்றி வந்த நாதாக்கள் வலிமார்கள் காட்டிய வழியிலும் சத்திய மார்க்கமான இஸ்லாத்திற்கு கட்டுப்பட்டவர்களாக நடக்க வேண்டும். அதிகமாக அதைப் பற்றி பேசுவது என்றால் இந்த காலகட்டத்திலே வேதனைக்குரிய விஷயமாகும். குறிப்பாக பல பள்ளிவாசல்களிலே அடிப்படை மார்க்க அறிவு கூட இல்லாதவர்கள் எல்லாம் முதவல்லிகளாக இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த நிலை மாறி குறைந்த பட்ச மார்க்க அறிவு உள்ளவர்கள் நிர்வாகத் திறமை மிக்கவர்கள் பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு வரவேண்டும். அல்லாஹ்வுடைய சட்டப்படி ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் வழிமுறையில் நடப்பவர்களாக இருக்க வேண்டும்.

**நிருபர் :** இமாம்களைப் பற்றி

**ஹாஜியார் :** முதவல்லிகளுக்குச் சொன்னது தான் இமாம்களுக்கும். இமாம்கள் மார்க்கம் அறிந்தவர்கள். இன்றைய சூழ்நிலையில் பொருளாதாரத்தில் அவர்கள் பின் தங்கியிருக்கிறார்கள். சில சூழ்நிலைகளில் நிர்வாகஸ்தர்களிடம் அச்சமுற்றவர்களாக காரியம் செய்து வருகிறார்கள். உண்மையைச் சொன்னால் அமைதிக்கு பங்கம் வந்துவிடுமோ என்று அச்சமுறுகிறார்கள். ஆனால் அவர்களும் அல்லாஹ்வின் மீது தவக்கல் வைத்தவர்களாக தம்முடைய மார்க்கக் கடமையை ஆற்ற வேண்டும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். உண்மையைச் சொல்வதற்கு எல்லோரும் அச்சப்படுவதற்கான காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதுவும் குறிப்பாக அரசுக்கு எதிரான கருத்துக்களாவோ, பெருந்தனக்காரர்களுக்கு எதிரான கருத்துக்களாகவோ இருந்தால் மிக யோசிக்கக் கூடிய காலத்தில் இமாம்கள் இருந்து வருகிறார்கள். இவற்றை எல்லாம் உதறிவிட்டு ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வஸல்லம் அவர்கள் வாழ்ந்து காட்டிய வழியில் அவர்களை பின்பற்றிய பெருமக்கள் காட்டிய வழியில் இமாம்கள் இருந்து சமுதாயத்திற்கு வழிகாட்ட வேண்டும்.

**நிருபர் :** தர்கா இதழ் வாசகர்களுக்கு தாங்கள் கூறு விரும்புவது என்ன?

**ஹாஜியார் :** ஒரு சிறப்பான பணியினை தமிழகத்தில் தர்காஹ் இதழ் செய்து வருகிறது. பல அறியமுடியாத அற்புதமான நிகழ்வுகளை செய்திகளாக தர்கா இதழ் தமிழக மக்களுக்கு முஸ்லிம் வாசகர்களுக்கு தந்து வருகிறது. ஆனால் அதை இன்னும் பரவலாக முஸ்லிம் சமுதாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஒரு அற்புதமான இதழை மிக அற்புதமான விஷயங்களை சுன்னத் வல் ஜமாஅத்தின் அற்புதமான கொள்கைகளை அவ்லியாக்களின் மேன்மையான விஷயங்களை உண்மையான விஷயங்களை இஸ்லாத்தின் விரோதிகளையும், முஸ்லிம் உலகக்கு எடுத்துக் காட்டும் அற்புதமான சிறப்பான பணியினை தர்கா இதழ் செய்து வருகின்றது. எல்லாம் வல் அல்லாஹூ தஆலாவின் அருளைக் கொண்டு ரஸூல் ஸல்லல் லாஹூ அலைஹி வ ஸல்லம் அவர்களின் துஆ பரக்கத்தைக் கொண்டும் பெரியோர்களின் துஆவைக் கொண்டு இந்த இதழ் சீரும் சிறப்புமாக நடைபெறும் அதனை நடத்தக் கூடிய ஆசிரியர்கள் நிர்வாக உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும் அல்லாஹ் கிருபை செய்ய வேண்டும் என்று துஆ செய்தவனாக தர்கா இதழ் வாசகர்களுக்கு என்னுடைய ஸலாமும் தெரிவிக்கிறேன். அஸ்ஸலாமு அலைக்கும்.

**நிருபர் :** மிகுந்த வேலை பளுவிக்கு இடையில் எங்களுக்கு நேரம் ஒதுக்கித் தந்தமைக்கு நன்றி அஸ்ஸலாமு அலைக்கும்.

**ஹாஜியார் :** நான் விளம்பரதை விரும்பவில்லை. என்பதால் யாருக்கும் பேட்டி கொடுக்கவில்லை. துனியாவுடைய விளம்பரத்திற்கு ஆசைப்படக்கூடாது. தர்கா இதழ் என்பதற்காகவே நான் பேட்டி தர சம்மதிதேன். எவ்வளவோ பத்திரிக்கைகளுக்கு நான் மறுப்பி தெரிவித்து விட்டேன். என்னுடைய பொது வாழ்க்கை என்பது ரொம்பவும் பறந்து விரிந்தது. கோயம்பத்தூர் கலவரக் காலங்களில் எல்லாம் தப்லீக் மற்றும் இஸ்லாமிய விரோதிகள் அத்துணை பேர்களும் வன்முறையை தூண்டினார்கள். சுன்னத் வல் ஜமாஅத்தினர்கள் மட்டுமே முன்னின்று அனைவரையும் காப்பாற்றி கலவரத்தை நிறுத்தி அமைதி என்ற ஒரு நிலைக்கு கொண்டு வந்து முஸ்லிம்களை நல்லவர்கள் என்று சொல்லவைத்து அமைதியை நிலைநாட்டியது சுன்னத் வல் ஜமாஅத் தான். அதில் நான் ஒரு கருவி மட்டும் தான்.

என்று பெரியவர்களுக்கே உரிய பெருந்தன்மையுடனும், அடக்கத்துடனும் பேட்டி தந்தார்கள்.

## தர்கா இதழ் நடத்தும் கட்டுரைப் போட்டி அறிவிப்பு...

இரண்டாம் ஆண்டாக சாஹெப் வலியுல்லாஹ் உருஸ் தினத்தை முன்னிட்டு கட்டுரைப் போட்டி அறிவிக்கப்படுகிறது. கட்டுரைப் போட்டியில் எல்லா வாசகர்களும் கலந்து கொள்ளலாம். தேர்ந்தெடுக்கப்படும் மூன்று கட்டுரைகளுக்கு உருஸ் விழா மேடையில் பரிசுகள் வழங்கப்படுவதுடன் பரிசு பெறுபவர் வந்து செல்ல பிரயாணச் செலவையும் தர்கா இதழ் ஏற்றுக் கொள்ளும். முதல் பரிசு பெற்ற கட்டுரை இதழில் பிரசுரிக்கப்படும்.

**கட்டுரைகளை உருது மொழியிலும் எழுதி அனுப்பலாம்.**

**தலைப்புகள்...**

- **☪ ஸஹாபியத் தோழர்கள் நபிகள் கோமானை நேசித்த முறை.**
- **☪ வலிமார்களின் கோமான் முஹ்யித்தீன் எஜமான் - ஏன்?**
- **☪ இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள்.**
- **☪ மத்ஹபு இமாம்களின் அவசியம்.**
- **☪ இஸ்லாத்தின் பெயரைக் கெடுக்கும் வஹ்ஹாபிய ஜமாஅத்துகள்.**
- **☪ மதநல்லிணக்கம் பேணும் இஸ்லாம்.**

**விதிமுறைகள் :–**

- கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து எழுத வேண்டும்.
- கட்டுரை டிம்மி தாள்களில் இரண்டு பக்கங்களுக்கு குறையாமலும், நான்கு பக்கங்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.
- மதரஸா மாணவர்களின் கட்டுரைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- *1.04.2011*க்குள்ளாக கட்டுரைகள் தர்கா அலுவலக விலாசத்திற்கு வந்து கிடைக்கும் படி அனுப்பி வைக்க வேண்டும்.

# வலிமார்கள் பேசுகிறார்கள்...
## கபரில் அடக்கியபின் மையத்துகள் மாறிப்போன அதிர்ச்சியும், ஆச்சரியமும் மிக்க உண்மைச் சம்பவம்...

**கல்கத்தாவில் ஆங்கில கமிஷ்னர்...**

ஏக வல்லோன் அல்லாஹ் தன் ஹபீபும் மஹ்பூபும் ஆகிய இந்த பிரபஞ்ச படைப்புகளுக்கெல்லாம் மஜ்ஹரே அதம் மூலமாகி நூரே முஹம்மதியாவை நேசிக்கும் ஒவ்வொருவருக்கும் தன் பேரருள் பிரதிபளிப்பை நம் கற்பனைகளுக்கெல்லாம் எட்டாத வண்ணம் இம்மையிலும் மறுமையிலும் அருளி தன்னுடைய கருணைக்கடலின் தாத்பரியத்தை இறக்கி வைத்தான் என்பதை கீழ்காணும் அதிஅற்புத சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இந்திய வரலாற்று ஏடுகளின் துயரப்பக்கங்களான ஆங்கில ஏகாதிபத்தியம் அடிமைப்படுத்தி ஆண்ட காலம் அது. முதல் ஆக்கிரமிப்புப் பகுதியான ஈஸ்ட் இண்டியா கம்பெனியின் தலைமை அலுவலகமாக கல்கத்தாவை நிர்ணயித்தார்கள். அந்த பகுதியின் ஆட்சியாளர் பொறுப்பில் ஆங்கிலக் கமிஷ்னர் ஒருவர் லண்டனிலிருந்து கொல்கத்தாவிற்கு பொறுப்பில் அனுப்பப் பட்டார். அக்காலத்தே இந்தியாவை சுதந்திரமாக நவாபுகளும், குறுநிலமன்னர்களும் ஆண்டுவந்த காரணத்தால் ஆட்சி மொழியாகவும், பொது மக்கள் பேசும் மொழியாகவும் ஃபார்ஸி மொழி இருந்து வந்தது. எனவே கமிஷ்னருக்கு ஃபார்ஸி மொழி அறிந்து கொள்வதில் அவசியமும் கட்டாயமும் ஏற்பட்டது. எனவே பாரஸீக மொழி கற்று கொள்வதற்காக கல்கத்தா நகரில் சிறந்த அறிஞராக விளங்கிய முல்லா சிராஜுத்தீன் அவர்கள் தினம் கமிஷ்னரின் பங்களாவிற்கு டியூஷன் சொல்லிக்கொடுக்க அஸர் வேளைக்கு வந்து மக்ரிபிற்குப் பின் திரும்பி விடுவது வழக்கமாயிருந்தது.

எனவே ஹஜ்ரத் அவர்கள் அஸர் மற்றும் மக்ரிப் தொழுகையை கமிஷ்னரின் வீட்டிலேயே நிறைவேற்றி வந்தார்கள்.

**கமிஷ்னரின் மகள் கலிமா ஓதியது...**

அந்த கமிஷ்னருக்கு மகள் ஒருவர் இருந்தார். மேலை நாட்டு கலாச்சார ரீதியாக வளர்க்கப்பட்டிருந்தாலும் நீதிக்கும், நியாயத்திற்கும் கட்டுப்பட்டு நடந்து, மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நற்குணவதியாக திகழ்ந்தார். ஹஜ்ரத் முல்லா சிராஜுத்தீன் அவர்கள் மிக சத்தமாக அழகிய கிர்அத்உடன் குர்ஆன் ஷரீஃப் ஓதி மக்ரிப் தொழுவது வழக்கம். அதைக் கண்ட கமிஷ்னரின் மகள் ஆச்சரியப்பட்டு போனாள். அப்பொழுது இஸ்லாத்தைப் பற்றியும், ஏகத்துவக் கொள்கையைப் பற்றியும் தெரிந்து கொள்ள ஆர்வமாக முல்லாஜியுடன் தினந் தோறும் அளாவுளாவது வழக்கம். ஏகன் அல்லாஹ்வைப் பற்றி தெளிவான விளக்கங்களும், ரிஸாலத் என்கிற தூதுவத்தில் நபிகள் கோமான் பேரொளி பிரகாச ஜோதியாய் வெளிப்பட்டு மானிட சமூகத்திற்கு முன்மாதிரியாய் வழிகாட்டியதும், அவர்களைத் தொடர்ந்து கலீஃபாக்கள் சஹாபாக்கள் வலிமார்கள் என்ற வரலாற்றை எடுத்துக் கூறி புரியவைத்து ஷரீஅத் சட்ட நடைமுறைகளை விளக்கியபோது ஆழ்ந்த சிந்தனையுடன் அனைத்தையும் கேட்டறிந்த கமிஷ்னரின் மகள் உண்மை சத்திய நிலைகளை புரிந்து இஷ்கே ரஸுல் என்கிற பெருமானாரின் பேரின்ப பரவச ஜோதியின் விளக்கு இஸ்லாம் என்ற ஹிதாயத்தை எத்தி வைத்ததை ஏற்று அப்பெண் பாத்திமா என்ற பெயர் மாற்றத்துடன் இஸ்லாத்தை தழுவினார் ஆனால் சூழ்நிலையை கருத்தில் கொண்டு அவர் இஸ்லாத்தை தழுவிய விவரம் முல்லாஜியைத் தவிற வேறு எவரும் அறியவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எதிர்பாராத விதமாக பிளேக்-கொள்ளை நோய் தாக்குதலால் பலகீனமான நிலையில் மரணத்தைத் தழுவும் தருவாயில் முல்லா சிராஜுத்தீன் அவர்களிடம் வஸியத்தாக ஹஜ்ரதே! என்னை முஸ்லிம்கள் கப்ரஸ்தானில் அடக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**மையத்து மாறியது...**

சந்தர்ப்ப சூழ்நிலைக் காரணமாக ஆங்கிலேயர்களின் கிருஸ்துவ முறைப்படியே அடக்கம் செய்யப்பட்டார். இந்த சம்பவத்தினால் வஸீயத் செய்யப்பட்ட ஹஜ்ரத் அவர்கள் மனவுறுத்தல் காரணமாக அவர்களுடைய நண்பர்களுடன் ஆலோசனை செய்து அடக்கப்பட்ட இடத்திலிருந்து அந்த பெண்ணின் மையத்தை யாருக்கும் தெரியாமல் எடுத்து வந்து இஸ்லாமிய மையவாடி கரஸ்தானில் அடக்கலாம் என்று முடிவு செய்து இரவில் மண்ணறையை தோண்டிய போது உள்ளே பெண்ணின் மையத்திற்கு பதிலாக ஒரு ஆண் சடலம் இருந்ததைக் கண்டு திடுக்கிட்டனர்.

அது வேறு சிற்றூரைச் சேர்ந்த மிர்ஸாவின் சடலம் என ஹஜ்ரத்திடம் உடன் இருந்த ஒருவர் அடையாளம் காட்டினார். கபரை மாற்றி தோண்டி நாம் தவறு இழைத்து விட்டோமோ என்று நினைத்து பல அடையாளங்களை சரி பார்த்தபோது அந்த பெண்மணியின் கபர் இதுதான் என்பது உறுதியானது. ஆனால் பயங்கர உண்மையும், அதிர்ச்சியும் தரும் சம்பவம் முல்லாவையும் அவர்களைச் சார்ந்தவர்களையும் போட்டு உலுக்கி எடுத்தது. இதைப்பற்றி முல்லாஜீக்கு மிகுந்த மன சஞ்சலமும் அதிர்ச்சியும் ஏற்பட்டவே இரவு முழுக்க இபாதத் செய்து பெருமானாரின் மீது சலவாத்து ஓதி வலிமார்களின் வஸீலா தேடி இஸ்திகாரா என்ற ஓதிப் பார்க்கும் அமலை படித்துக் கொண்டிருக்கும் போது கண் சொருகியது. கனவா அல்லது நினைவா என்று தெரியாத ஒரு நிலையிலே பார்க்கலானார்.

**மரித்தவர் கூறிய மர்மம்...**

என்முன் தோன்றிய இஸ்லாதைத் தழுவிய என் மாணவி பாத்திமா அவர்கள் ஹஜ்ரத் அவர்களே! என் கபரைத் தோண்டி என் வஸீயத் பிரகாரம் நடந்து கொள்ள தாங்கள் மேற்கொண்ட சிரமத்திற்கு நான் மன்னிப்பு வேண்டுகிறேன். நான் இந்த கப்ரில் அடக்கப்பட்ட போது பர்ஜக் என்ற மரணம் முதல் ஹஷர் மைதானத்தில் கூடும் நீதி நாள்வரை உள்ள நிலைகளை என் கண்முன் கண்டேன்.

என்உடல் கபரில் வைக்கப்பட்ட போது ஏகன் அல்லாஹ்வின் உத்திரவோடு என் உடல் மலக்குகளால் சுமக்கப்பட்டு மதீனாவில் ஜன்னதுல் பகீக்கு மாற்றப்பட்டது. எனக்கு இந்த நிலை அல்லாஹ்வின் மேல் கொண்ட ஈமானாலும், ரஸுல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் மீது நான் வைத்திருந்த இஷ்க் என்ற நேசத்தாலும் அல்லாஹ் என் நிலையை உயர்த்தினான்.

இன்னும் அதே வேளையில்

இரண்டு மையத்துகள் மாற்றப்பட்ட அதிசயமும் நான் கண்டேன். உலக இச்சைகளில் மூழ்கியிருந்ததால் மதீனாவில் பிறந்திருந்தும் கூட அந்த புனித மண்ணை நேசிக்காது மேலை நாட்டு நாகரீகத்தில் மூழ்கித்திளைத்த ஒரு அரேபியரின் சடலம் மிர்ஜாவின் கபருக்கு மாற்றப்பட்டதையும், இந்தியாவில் இருந்து கொண்டு பணத்தாசையும், ஆங்கில மோகமும் கொண்ட மிர்ஸாவின் சடலம் என் கபருக்கு மாற்றப்பட்டதையும் கண்ணுற்றேன்.

ஆகையால் தான் என் கபரை தாங்கள் தோண்டிய போது என் உடலிற்கு பதிலாக அந்த மிர்ஸாவின் உடலைக் கண்டீர்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் தன் மீது ஈமான் கொண்டு தன்னால் அனுப்பப்பட்ட தூதரான நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் மீது விசுவாசம் கொண்டு முஹப்பத் என்ற அன்பு பாராட்டி நீதியுடன் உலக வாழ்க்கை நடந்து வருவோருக்கு நற்கூலியை வழங்குவான் என்பதற்கு நானே ஒரு அத்தாட்சி ஆவேன் என்று அவர் கூறி மறைந்தார்.

**நன்றி: அல்லாமா அர்ஷதுல் காதிரி எழுதிய லாலா ஜார் நூலிலிருந்து ஜல்வயே ஜேபா அத்தியாயத்தின் சுருக்கம்.**

**வலிமார்கள் தான் உரைக்கல்...**

மேற்கண்ட ஆச்சரியப்படத்தக்க நம் அறிவுக்கு எட்டாத சம்பவம் நடந்திருப்பது கபரு வாழ்க்கையின் பர்ஜக் என்று சொல்லக் கூடிய நிலைகளை சார்ந்ததாகும். இப்படி மௌதுக்குப்பின் நடக்கும் சாத்தியக்கூறுகள் உண்டா கபரில் இருந்து மையத்துகள் இப்படி மாற்றப்படுவது நடக்கக் கூடியது தானா? என்றால் அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் அகீதா ஷரீஅத் சட்ட கொள்கைப் படி அல்லாஹ்வால், அல்லாஹ்வின் குத்ரத்தில் இது ஆகுமானது என்பது தான் பதிலாகும்.

மேற்கண்ட அதிர்ச்சியூட்டும் நிகழ்வுகள் பிரபஞ்சத்தில் நடந்து கொண்டிருப்பதாகவேப்படுகிறது. இதை சரி காண்பதற்கு உரைக் கல்லாக - எடை போடும் தராசாக அல்லாஹ்வின் நேசத்தைப் பெற்ற வல்ல வலிமார்களேயாவார்கள் என்பதை அடுத்து வரும் ஆதாரப் பூர்வமான சம்பவத்தை நோக்கும் போது அல்லாஹ்வின் மீது ஈமான் கொண்டு அவனது ஹபீபும் மஹ்பூபுமாகிய எம்பெருமானார் நபிகள் கோமான் கண்மணி நாயகம் ரஸுலே கரீம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் இஷ்கை பெற்று அவர்கள் காட்டித் தந்த மேன்மையான ஷரீஅத்தை பின்பற்றி ஒழுகி தரீகத்தில் தரிபட்டு நடப்போருக்கு இந்த ரகஸியங்களை கூட அல்லாஹ் வெளிப்படுத்தி காட்டித் தருகிறான் என்பதற்கு ஆதாரப்பூர்வமாய் உள்ள கீழ்காணும் சம்பவத்தை நோக்குங்கள்..

காஜயே காஜகான் சிஷ்த் என போற்றப்படும் ஆறு வலிமார்களில் ஒருவரான மஹ்பூபே இலாஹி என பட்டம் பெற்ற ஹிஜ்ரி 800ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த மேன்மை மிகு மஹான் ஹஜ்ரத் காஜா ஸையிதினா நிஜாமுத்தீன் அவுலியா அவர்களின் அன்றாட நாட்குறிப்பு -டைரி நோட்ஸ் அவர் காலத்திலேயே பல்லாயிரம் பக்கங்கள் குறிப்பெடுக்கப்பட்டு அதில் முக்கியமானவற்றை அவர்களின் புனிதமான அனுமதியுடன் ஹஜ்ரத் அவர்களின் கலீபாக்களில் ஒருவரான ஹஜ்ரத் காஜா அமீர் ஹஸன் அலா சிஷ்தி தெஹ்லவி அவர்கள் அது போதே பாரசீக மொழியில் ஃபவாயிதுல் ஃபுவாத் (நன்மைகளின் மழை சாரல்) என்று பெயரிட்டார்கள். அதன் பாரசீகமூலத்துடன் உருதுவில் எஜமான் தர்காவின் சாபுமார்களைச் சேர்ந்த ஹஜ்ரத் காஜா ஹஸன் நிஜாமி ஸானி அவர்கள் 2007ம் ஆண்டு டெல்லியில் வெளியிட்டார்கள்.

ஆயிரம் பக்கங்கள் கொண்ட அந்த நூலின் முன்னுரையின் 47வது பக்கத்தில் எஜமானார் காஜா நிஜாமுத்தீன் அவுலியா அவர்கள் தாம் பிறந்த ஊரான பதாயூன்- யூ.பி.யில் அவர்களின் ஊரில் வாழ்ந்த வலிமார் களில் ஒருவரான மௌலானா சிராஜுத்தீன் திர்மிஜி அவர்களைப் பற்றி கீழ்கண்டவாறு கூறியுள்ளார்கள்.

பதாயூனில் வாழ்ந்த வலிமார் களில் மௌலானா சிராஜுத்தீன் திர்மிஜி அவர்கள் மேன்மைக்குரிய வர்களில் ஒருவராவார். இவர் மக்காவிற்கு ஹஜ் பயணம் மேற் கொண்ட போது அந்த புனித மண்ணி லேயே ஐக்கியமாகிப்போவேன் என்ற நிய்யத்து - எண்ணத்துடன் எல்லோரிடமும் நிரந்தரமாக விடைபெற்றுச் சென்றார்கள்.

ஆனால் ஹஜ்ஜையும் ஜியாரத்தையும் முடித்த கையோடு பதாயூனுக்கே வந்து விட்டார்கள். இதைப் பற்றி அவர்களிடம் மக்காவிலேயே அடக்கமாகும் எண்ணத்தோடு சென்றீர்களே என்று வினவப்பட்ட போது அதற்கு அவர்கள் நான் கண்ட காட்சி என்னை மீண்டும் பதாயூன் திரும்பவைத்து விட்டது என்று கூறத் தொடங்கினார்கள்.

**நடந்தது என்ன...?**

ஓரிரவு நான் கனவில் நாற்புறங்களிலிருந்தும் ஜனாசா சந்தூக்குப் பெட்டிகளில் புனித மக்கமா நகருக்கு கொண்டு வரப்பட்டு அடக்கப்படுவதும், மற்றும் அங்கு அடக்கப்பட்டிருக்கும் மையத்துகளை தோண்டி எடுத்து வெளியேற்றப்படும் வேலைகள் நடந்து கொண்டிருப்பதையும் கண்டு மன பீதி அடைந்த நான் இது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்று வினவிய போது... யார் இந்த புனித பூமியில் அடக்கமாக தகுதியுள்ள வரோ உலகின் எந்த மூலையில் அவர் அடக்கப்பட்டிருந்தாலும் இங்கு கொண்டு வந்து அடக்குவதற்கும், யார் இங்கு அடங்குவதற்கு தகுதியற்றவரோ அவர் இங்கு அடக்கப்பட்டிருந்தாலும் அந்த சடலங்களைத் தோண்டி வெளியேற்றிவிடும் படி உத்தரவிடப் பட்டிருக்கிறோம் என்றார்கள். இந்த உண்மை நிலவரத்தைக் கண்ட நான் எங்கு அடக்கப்படினும் தகுதியானவனாய் இருப்பின் என் நிய்யத்து பூர்த்தியாகிவிடும் என்பதால் நான் பதாயூன் திரும்பி விட்டேன் என்றார்கள்.

மேற்கண்ட குத்ரத்தின் சம்பவங்களால் கிடைக்கும் படிப்பினை என்னவென்றால் அல்லாஹ், ரஸுல், அவ்லியாக்கள் என்று ஈமான் கொண்டு அவர்கள் நடந்து காட்டிய பாதையில் நேர்மையாகவும், உண்மையோடும், சத்தியத்தின் பால் நடந்து வருமோயாயின் கபரில் இருந்து ஹஷர் மைதானம் நியாயத் தீர்ப்பு நாள் வரை உள்ள ஃபர்ஜக் என்ற மறுமை காலம் வரை நீண்டு துயில் கொண்டு நிம்மதியாய் இருப்பது அவரவர் நல்லெண்ணங்களைக் கொண்ட அமல்களின் அடிப்படையில் உள்ளது என்பது தெரியவருகிறது.

எனவே நம் எல்லோரையும் எல்லா வல்ல அல்லாஹ் ரஸுல் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் ரஹ்மத்தாலும், வலிமார்களின் வஸீலாவாலும் நேரிய பாதையில் நடத்தாட்டுவானாக. ஆமீன் பி ஜாஹே சையதுல் முர்ஸலீன்!

# தர்கா இதழ் வாசகர் மன்றம்...!

## ✉ தரணி போற்றும் தர்கா இதழ்...!

யாக் கரீம் - நாயன் நற்கிருபை செய்வானாகவும். அன்பின் பாசத்திற்கினிய தர்கா வெளியீட்டாளர்கள் அனைவர்களுக்கும் அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹ். தங்களின் தரணி போற்றும் தர்கா இதழும், தர்கா ஜன்த்ரி 2011ம் கிடைக்கப் பெற்றேன். மனம் மிகவும் மகிழ்ந்தது. மிக்க நன்றி மேலும் தங்களின் இச்சீரிய பணி தொடர்ந்து நடைபெற எல்லாம் வல்ல இறைவன் தங்கள் அனைவர்களுக்கும் நீண்ட ஆயுளை தந்து மேன்மேலும் சீரோடும், சிறப்போடும் சிறப்புற்று விளங்க துஆ செய்யும் உங்கள் அன்பிற்கினிய **A.ஜெய்னுல்லாபுதீன், மேட்டுப்பாளையம். 02.02.2011.**

## ✉ நூலுக்கும், இதழுக்கும் நன்றி...!

அல்லாஹ்வின் அருளும், ரஸூலின் ரஹ்மத்தும், வலிமார்களின் வஸீலத்தும் நம் அனைவர்கள் மீதும் உண்டாவதாக. நீங்கள் அனுப்பிய நூல்களும், இதழ்களும் வந்து சேர்ந்தன. அதைப் பார்த்ததும் மகிழ்ச்சி அடைந்தேன். நீங்கள் அனுப்பியதற்கு நன்றி! உங்களை அல்லாஹ் வழிநடத்துவானாக ஆமீன்! நாங்கள் துஆ செய்கிறோம். நன்றி...

**A.S.முஸ்தஃபா (மஅகும் அலி ஷாஹ்)**
**கடலூர். 21.01.2011**

## ✉ கொள்கை முரசு தர்கா இதழ்...!

அன்பின் சகோதரர் ஜனாப் சையது அஹ்மத் ஆசிரியர் தர்கா இதழ் அவர்கட்கு நல்வாழ்த்துகளுடன் என் இனிய சலாம்கள்...

நலம்! தங்களின் நலமும் வளமும் தழைத்தோங்க பிரார்த்திக்கிறேன்...!தாங்கள் அனுப்பித் தந்த தர்கா இதழ் மற்றும் வாழ்த்து அஞ்சல் மூலம் வந்த சமயம் நான் வெளியூரில் இருந்தேன். சமீபத்தில் வந்தேன்.

நமது கொள்கை முரசாக பறைசாற்றும் இதழில் உள் அடங்கிய செய்திகள் வலுவானதும், வனப்பானதும் ஆகும். தொய்வின்றி தொடர வாழ்த்துக்கள்...! அன்புடன்,

**கவிஞர். இதயதாசன்,**
**நாகூர் ஷரீஃப். 07.01.2011**

## ✉ விடுபட்ட உருஸ் தினம்...!

அன்புடையீர்... அஸ்ஸலாமு அலைக்கும். தாங்கள் புதியதாக வெளியிட்டுள்ள 1432ம் ஹிஜ்ரி மற்றும் 2011 ஆங்கில ஆண்டுக்கான தர்கா ஜன்த்ரி புத்தகம் கிடைத்தது. மிக்க நன்றி.

சென்ற ஆண்டு புத்தகத்தில் விடுபட்டுள்ள எனது சாச்சா பொதக்குடியில் அடங்கியுள்ள பாவா ஜனாப் இபுறாஹீம் குரைஷி வலியுல்லாஹ் அவர்களைப் பற்றி நான் அப்போது கடிதம் எழுதியது தங்கட்கு நினைவிருக்கலாம். அக்கடிதமும் தங்களின் மாத இதழில் இடம் பெற்றது. ஆனாலும், இவ்வாண்டு புதியதாக வெளியிட்டுள்ள புத்தகத்தில் அன்னாரின் பெயர் மற்றும் உருசு நடக்கும் நாள் ரஜப் மாதம் பிறை 6 என்பதும் விடுபட்டுள்ளது. தர்காவின் முதவல்லி என்ற முறையிலும், மகான் பாவா அவர்களின் வாரிசுதாரர் என்ற முறையிலும் இது பற்றி தங்கட்கு ஞாபகமூட்டுவது எனது கடமையாக இருப்பதால், இன்ஷா அல்லாஹ் இனி வருங்காலங்களில் அடுத்து தர்கா ஜன்த்ரி புதிய பதிப்பு வெளியிடுங்கால் மறவாமல் அம்மாமனிதரைப் பற்றிய குறிப்புகளை கட்டாயம் தாங்கள் அச்சிட்டு வெளியிட வேண்டுமென தங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். எனது சாச்சா பாவா பற்றி தேதி குறிப்பு விபரம் கம்பூட்டரில் டைப் செய்துள்ளது இத்துடன் தங்கள் பார்வைக்காகவும் தங்கள் அலுவலக பைலில் வைக்கவும் இணைத்து அனுப்பியுள்ளேன். மிக்க நன்றி, அல்ஹம்துலில்லாஹ். வஸ்ஸலாமு அலைக்கும்.

***அ. அன்வர்தீன் (அஸ்மாபாக் அன்வர்தீன்),***
***ராமநாதபுரம், 28.01.2011***

(தவறுகளுக்கு மன்னிப்பை வேண்டுகிறேம். அடுத்த ஜன்த்ரி தயாரிப்பில் இணைத்துள்ளோம். வஸ்ஸலாம். ஆ-ர்)

## ✉ முற்போக்கு பார்வை...!

அன்புள்ள தர்கா இதழ் ஆசிரியர் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹ்...

தாங்கள் அனுப்பிய தர்கா இதழுடன் தர்கா ஜன்த்ரியையும் பெற்றுக் கொண்டோம். மிக்க மகிழ்ச்சி.

① இம்மாத தர்கா இதழில் ரஸூலுல்லாஹ்வின் புனித ரவ்ளா ஷரீஃபுக்கு முன் சவூதிய மன்னர் ஜியாரத்து செய்து கையேந்தி துஆ செய்வதை சவூதிய முதவ்வாக்கள் (முல்லாக்கள்) ஏன் தடுக்கவில்லை? என்ற கேள்வியையும், இங்குள்ள தவ்ஹீத்களின் தவறான பிரச்சாரத்திற்கு புகைப்படத்துடன் தர்கா இதழில் அச்சிடப்பட்டது அவர்களுக்கு ஒரு மாபெரும் அடியாகும்.

② அஹ்லே பைத்து 12 இமாம்களின் பெயர்களை அறியாமலிருக்கும் எல்லோருக்கும் அவர்களின் பெயர்கள் அறிவித்திருப்பது ஒரு மேலான செய்தியாகும். இமாம்களின் தொடர்கள் தொடர்ந்து வர வேண்டும் என விரும்புகிறோம்.

③ தமிழ் நாட்டில் உள்ள சுன்னத் வல் ஜமாஅத் மக்கள் தெரிந்து கொண்டது, ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களி திருமுடி சின்னங்களைப் பேணி பாதுகாத்து மௌலூது, பாத்திஹா முறைப்படி ஓதி வருவதும், ஆஷூரா தினம் கொண்டாடி வருவதும் தெரிந்ததே. தங்கள் தர்கா இதழ் நிருபர் பேட்டியில் ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹு வஜ்ஜஹு, ஹஜ்ரத் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு, கௌஸுல் அஅஜம் முஹ்யித்தீன் எஜமான் அப்துல் காதிர் ஜீலானி ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் திரு முடியும் வேலூர் மதர்ஸயே லதீஃபியாவில் பேணி பாதுகாத்து அந்தந்த மாதத்தில் மௌலூது, பாத்திஹா ஓதி முறைப்படி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்ற செய்தியைப் படித்ததும், நமக்கும் அப்புனித மகான்களின் மௌலூது பாத்திஹாக்களில் கலந்து கொள்ள நஸீபு கிடைக்க வேண்டும் என்ற உள்ளக்கிளர்ச்சி ஏற்படுகின்றது.

④ அரேபிய நாட்டில் எங்கும் தர்காக்கள் இல்லை என்று தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கும், தப்லீக் வஹ்ஹாபிக் கூட்டாத்தாருக்கு மத்தியில் தங்களின் தர்கா இதழின் நிருபர் மூலமாக கிடைக்கப் பெற்ற புனித தர்காக்களின் ஜியாரத் பயணக் கட்டுரையை இந்த இதழில் அச்சடித்து தெரியப்படுத்தியது மக்களுக்கு ஒர் மேலான செய்தியாகும் என்பதில் ஐயமில்லை.

⑤ அரசியல் கட்சிகள் - பாதயாத்திரை செய்து வருவது யாவரும் அறிந்ததே. இருந்தாலும் தாங்கள் தர்கா இதழில் சாந்தி, சமாதானம், சகோதரத்துவம், மனித நேயம் வேண்டி நடந்த மஹா பாத யாத்திரையை இஸ்லாமியர்களும் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்ற செய்தி இந்த இதழில் தெரியப்படுத்தியது தமிழ் நாட்டில் உள்ள எங்களுக்கு ஓர் இனிப்பான முன் உதாரணமான முக்கிய செய்தியாகும்.

தர்கா இதழ் இன்று முற்போக்கு பார்வையுடன் அதிக பக்கங்களுடன் வளர்ந்து வருகிறது. இது மென்மேலும் சமுதாய சுன்னத் வல் ஜமாஅத் மக்களுக்கு சேவை ஆற்றிட துஆ செய்கிறேம்.

**R.ஹாரூன் பாஷா,**
**உடுமலைப் பேட்டை. 26.01.2011**

## சவூதி மன்னர் நபிகளாரின் ரவ்ளா முன்பு கையேந்தியது...!

கடந்த இதழில் சவூதி மன்னர் அப்துல்லாஹ் ரஸூலுல்லாஹ்வின் புனித ரவ்ளா ஷரீஃப் முன்பு ஜியாரத்து செய்யும் வீடியோ காட்சி இணையதள விலாசத்தை வெளியிட்டிருந்தோம். ஒரு குறியீடு விடுபட்டதின் காரணமாக அது திறக்க வில்லை என்பதையும் சரியான விலாசத்தை வாசகர்களுக்காக மறுபடியும் இங்கே தருறோம். சிரமத்திற்கு மன்னிக்கவும். (ஆ-ர்)

http://www.youtube.com/watch?v=YyC3AcjoCks&feature=player_embedded